பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 23 திங்கட்கிழமை (06-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:162

## கடல் விமானம் பாதை மாறிப் பறந்ததற்கு தாம் பொறுப்பல்ல என்கிறார் பாலசிங்கம்

லண்டன்,மே6

புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது மனைவி அடேல் பாலசிங்கத்தையும் அவர்களது லண்டன் பயணத்துக்காக இரணைமடு நீர்ப்பரப்பிலிருந்து மாலைதீவுக்கு ஏற்றிச்சென்ற கடல் விமானம், பாதைமாறி, திருகோணமலை கடற்பகுதிக்குமேலாகச் சென்றதற்கு தாம் பொறுப்பல்ல என்று பாலசிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

"நோர்வே ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட கடல் விமானத்தின் விமானியே எந்தப் பாதையால் செல்வது என்பதைத் தீர்மானித்துச் செயற்பட்டார்.

"திருகோணமலைக் கடற்பகுதிக்கு மேலாகச் செல்லும்படி விமானியை நான் பணிக்கவில்லை. அது அவர்களின் முடிவு. மேலதிக பாதுகாப்பு ஏற்பாடாக அந்த முடிவை அவர்கள் எடுத்தார்கள். அதற்குக் காரணம் என்ன வென்று எனக்குத் தெரியாது.

"நான் திருகோணமலைக் கடற்பகுதிக்கு மேலாகப் பறந்துசென்றதன் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறிவிட்டேன் என்று குற்றம் சுமத்தி கொழும்புப் பத்திரிகைகள், சர்ச்சையைக் கிழப்புவது எனக்கு ஆசசரியத்தைத் தருகின்றது.

"இந்த விடயம் தொடர்பாக நோர்வே அனுசரணைக் குழுவினருக்கும் நான் விளக்கம் அளித்துவிட்டேன். அவர்கள் பூரண திருப்தியடைந்துள்ளனர். நோர்வே அரசு இந்த விஷயத்தை இலங்கை அரசுக்கு தெளிவுபடுத்திவிட்டது" - என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். (உ-12)

# வாகரைத் தாக்குதல் சம்பவம்

# பாரதூரமான யுத்தநிறுத்த மீறல்!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,மே6

**கடந்த புதன்கிழமை மாலை வாகரைக் கடலில் மீனவர்களின் படகுகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல் அப்பட்டமான - பாரதூரமான - யுத்தநிறுத்த மீறலாகும்.**

**- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள்.**

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கடற்படையினரைக் கண்டித்துத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

கடற்படையினர் தமது விரோத மனப்பான்மையை விடுத்து, சமாதான உடன்படிக்கைப்படி, சரிவர நடப்பதை அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் புலிகள் இந்த அறிக்கையில் கேட்டுள்ளனர்.

புலிகள் தங்கள் கிளிநொச்சி தலைமையலுவலகத்திலிருந்து உத்தியோகபூர்வமாக இந்தக் கண்டன அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மே முதலாம் திகதி வாகரைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகளை நோக்கி கடற்படையினரின் பீரங்கிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுக்கு ஆதரவுதர றொனி டி மெல் முடிவு!

கொழும்பு,மே6

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம்.பியான றொனி டி மெல் அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கப் போவதாக நேற்று அறிவித்துள்ளார்.

வெலிகம லங்காராம விகாரையில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய சமயமே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாட்டின் நன்மை கருதி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து செயற்பட்டேன். பல எதிர்பார்ப்புக்களுடன் செயற்பட்ட எனக்கு ஏமாற்றமே கிடைத்தது.

சமாதானத்தை எட்டுவதற்கு பிரதமர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கப்போகிறேன். அவரது கரத்தைப் பலப்படுத்தி, சமாதானத்தை எட்டுவதற்கு எனது பங்களிப்பை வழங்குவேன் - என்றார் அவர். (உ-3-12)

### தாக்குதலுக்குள்ளான படகில் இருந்த

## ஆயுதங்களையும் புலிகளையும் தொடர்புபடுத்த ஆதாரம் இல்லை

### கண்காணிப்புக் குழுத் தலைவர் தகவல்

கொழும்பு,மே6

வாகரைக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சேதமடைந்த படகின் எஞ்சிய பகுதிகள் இடையே ஆயுதங்கள் இருந்ததை எமது கண்காணிப்பாளர் ஒருவர் பார்த்துள்ளார். இதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். ஆனால் அது பற்றிய உறுதியான ஆதாரங்கள் எதுவும் எங்களிடம் இல்லை.

கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை குறித்துக் கேட்டபோது, அந்த அறிக்கையைத் தாம் இன்னமும் படிக்கவில்லை என்று அவர் பதில் அளித்தார்.

இந்தமாத இறுதிக்குள் மேலும் பல கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார். (உ-3-12)

## ஐ.நா. மாநாட்டில் புலிகள் மீது சேறு பூசி ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுவார்?

கொழும்பு,மே6

நாளைமறுதினம் நியூயோர்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர்கள் மாநாட்டின் ஆரம்ப வைபவங்களில் உரையாற்றவிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் மீது சேற்றை வாரியிறைப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உட்பட பல உலகத் தலைவர்கள் இந்த ஆரம்ப வைபவத்தில் பங்குபற்றவிருக்கின்றார்கள்.

அமெரிக்காவில் இந்நிகழ்வு இடம்பெறுவதால் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் வாய்ப்பு அமெரிக்க ஜனாதிபதிக்குத் தானாகவே வழங்கப்படு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




## புலிகளின் அலுவலகம் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம்,மே6

விடுதலைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் செயலகத்தின் திறப்பு விழா இன்று காலை 10மணிக்கு வதிரி, நெல்லியடியில் இடம்பெறவுள்ளது. (உ-3)

## தடை நீக்கத்தை ஆட்சேபித்து சனியன்று கொழும்பில் கூட்டம்

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாம் என்று கோரி எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தீவிரப் போக்குடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிக்குமார்களும் இணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

அதேசமயம் -

இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்தும் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாம என்று அவரிடம் கோரிக்கை விடுக்கவிருக்கின்றனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கபபட்டது. (உ-3-12)

## சமாதானப் பாதயாத்திரை புதனன்று இங்கு வந்துசேரும்

யாழ்ப்பாணம்,மே6

கதிர்காமத்தில் கடந்த 21 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமாதான யாத்திரை நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடையவிருக்கின்றது.

கண்டி வீதி வழியாக வரவிருக்கும் இந்தச் சமாதான யாத்திரையை முகமாலையில் வைத்து வரவேற்று யாழ்.நகருக்கு அழைத்து வர ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில் பங்குபற்ற புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தலைமையில் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

யாழ்.நாகவிகாரைக்கான கோபுரக் கலசம் இந்த யாத்திரையில் எடுத்து வரப்படுகின்றது.

வவுனியாவை இன்று வந்தடையும் இந்தப் பாத யாத்திரைக் குழுவினரை வரவேற்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரச அதிபர் கே. கணேஷ் தலைமையிலான குழுவினர் யாத்திரையில் வருவோரை வரவேற்பர். (உ-3)

## தனியார் விமான சேவை நடத்த மற்றொரு நிறுவனத்துக்கு அனுமதி

கொழும்பு,மே6

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பயணிகள் விமான சேவையை நடத்துவதற்கு மற்றொரு தனியார் நிறுவனத்துக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தற்சமயம் தினமும் மூன்று சேவைகளை நடத்திவரும் 'ஹெலிரூர்ஸ்' நிறுவனத்துக்கு மேலதிகமாக 'எக்ஸ்போ ஏவியேஷன்' என்ற நிறுவனத்துக்கு அரசு அனுமதி வழங்கியிருந்தது.

தற்போது மற்றொரு நிறுவனமான 'ஏயர்லங்கா இன்ரநஷல்' என்ற நிறுவனத்துக்கும் அரசு தற்சமயம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்விரு நிறுவனங்களும் எப்போது தங்களது சேவைகளை ஆரம்பிக்கும என்ற விவரங்களோ இச்சேவைக்கு அறவிடப்படவிருக்கும் கட்டணங்களின விவரங்களோ இதுவரை வெளியாகவில்லை. (உ-3-12)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தீவகத்துக்கு விடுதலைப் புலிகளை அனுமதியுங்கள்!

# கடற்படையினரின் அடாவடித்தனங்களை தடுங்கள்!!

## கண்காணிப்புக்குழுவிடம் நேரில் இன்று கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே6

"தீவக மக்களாகிய எம்மோடு விடுதலைப் புலிகள் இணையவும், அவர்கள் எமது பிரதேசத்தில் சுமுகமாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவும் அனுமதிக்கவேண்டும். எமது பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் கடற்படையினர் இங்கு புரியும் அடாவடித்தனங்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

"ஏனைய பிரதேசங்களில் வீசும் சமாதானக் காற்றை எங்கள் பிரதேசத்திலும் நிம்மதியாகச் சுவாசிக்க வழி வகுத்துக் கொடுங்கள்."

- 'தீவக மக்கள் நலன் காப்பகம்' அமைப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மேற்கண்டவாறு கோரவுள்ளது.

கண்காணிப்புக் குழுவை இன்று சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாட்டு அறிக்கை ஒன்றை தீவக மக்கள் நலன் காப்பகம் கையளிக்கவிருக்கின்றது.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துடித்துநிற்கும் எமது தீவக மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை தீவக மக்கள் சார்பில் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு தீவக மக்கள் நலன் காப்பகத்தினர் ஆகிய எமக்கு உள்ளது.

அந்த வகையில் நாம் கண்காணிப்புக் குழுவினர் ஆகிய உங்களுக்கு முன்னரும் அறியத்தந்துள்ளோம். எனினும் யுத்தநிறுத்த கண்காணிப் புக்குழுவிற்கு வடபிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் எஸ்.வீரசேன, தீவகம் குறித்து அளித்த விளககத்தை 'உதயன்' பத்திரிகையில் கண்டு தீவக மக்கள் ஆகிய நாம் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். வடபிராந்திய கடற்படைத் தளபதியின் இந்தப் பொறுப்பற்ற செயலானது இலங்கையில் ஏற்பட்டு இருக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிப்பதாகவே நாம் கருதுகின்றோம்.

அத்தோடு மட்டுமல்லாது தமிழ் இனத்தால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளே. அவர்கள் எமது தீவகப் பிரதேசத்திற்கு வருவதை தடைசெய்தது கடற்படையினரின் இனவாதப்போக்கையே எடுத்துக்காட்டுகிறது. எமது மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எம்மோடு உறவாடுவதைத் தடுக்க கடற்படையினருககு என்ன உரிமையுண்டு? தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை இலங்கை அரசே இனம் கண்டு, அவர்களுடன் பேச்சு நடத்தி, சுமுகமான சமாதானச் சூழலை உருவாக்க முயலும் இத்தருணத்தில், எங்களின் உறவுகளை நாம் வரவேற்கும் உரிமையை இலங்கை கடற்படையினர் பறித்துள்ளனர். நாம் எமது அடிப்படை மனித உரிமைகூட அற்றவர்கள் ஆக்கப்பட்டுள்ளோம்.

எமக்காகத் தம்மை அர்ப்பணித்த அந்த தியாக செம்மல்களை எமது பிரதேசத்திற்கு வரவேற்கவோ, ஏன் வீட்டு வாசலில் நின்று எட்டிப்பார்க்கவோ முடியாமல் போனமையையிட்டு நாம் கொதிப்படைகிறோம். கடற்படையினரின் இந்த ஈனச்செயல் அவர்களின் மிருகத்தனத்தையே காட்டிநிற்கிறது. எனினும் மலரும் சமாதானத்தைக் குழப்ப தீவமக்கள் ஆகிய நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் மனிதர்கள் என்பதை மறந்த கடற்படையினரின் அநாகரிக செயலைக்கூட இதற்காகவே நாம் பொறுத்துக்கொண்டுள்ளோம்.

எனவே, எமது நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைகொள்ளவும், தீவ மக்களும் அந்த சுதந்திரக்காற்றை நிம்மதியாகச் சுவாசிக்கவும் இன்றைய அரசுடன் கலந்துரையாடி, எமக்கு நல்லதொரு தீர்வை ஏற்படுத்தித் தருவீர்கள் என்ற தளராத நம்பிக்கையுடன் தீவக மக்களாகிய நாம் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எமது நிலைப்பாட்டையும் முன்வைக்கின்றோம்.

எமது தேசம் யுத்தமேகங்களால் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் இருந்த ஊரடங்குச் சட்டம், பொருளாதாரத்தடை என்பனவும் இராணுவக் கெடுபிடிகளும் ஏனைய பிரதேசங்களை விட சற்று தளர்த்தப்பட்ட பிரதேசமாகவே தீவகம் இருந்து வந்துள்ளது. ஆனால், யுத்த காலங்களில் இல்லாத நடைமுறைகள் சோதனை என்ற பெயரில் அநாகரிகங்கள், கெடுபிடிகள், கட்டுப்பாடுகள் என்பன இப்போது தீவகப்பிரதேசத்தில் மலிந்துள்ளன.

அதுமட்டுமல்லாது இன்று எமது தீவகப்பிரதேசம் சர்வாதிகாரமாக இராணுவப்பிரதேசம் என்று பிரகடணப்படுத்தப்பட்டு, இங்கு எமது மக்களின் உடைமைகளும், உரிமைகளும் பறித்து, அடக்கப்பட்டு வருவது கண்கூடு.

எனவே, தீவகப் பிரதேசம் இராணுவப்பிரதேசம் எனப்படுவதையும் உரிமைகள், உடைமைகள் பறிக்கப்பட்டு தீவகமக்களின் தனிமனித சுதந்திரத்திற்கு கைவிலங்கிடப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

1991 ஒக்ரோபர் 30 ஆம் திகதி வேலணைப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய தீவகப்பகுதிகளில் இருந்து மக்கள் புலம்பெயர நேரிட்டது. புலம்பெயர்ந்த மக்களின் ஒரு சிறு பகுதியினர் மீண்டும் 1996 இல் தமது சொந்த இடங்களில் வாழத்தலைப்பட்டனர். இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து 1998 இல் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கபட்டனர்.

இவர்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களில் குடியமர்ந்த பின்னர், அனுபவித்து வரும் துயரங்கள் சொல்லில் அடங்காதவை; இதை அனுபவித்தவர்களுக்கே இது புரியும்.

தீவகப் பொதுமக்களின் பல்வேறு உரிமைகளை மறுத்ததன் மூலம் கடற்படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறியுள்ளனர்.

மக்கள் வாழும் பிரதேசத்தை அவசர காலச்சட்டங்களைப் பயன்படுத்தி-யுத்த நடவடிக்கைகளை காரணம் காட்டி-மக்களின் உடைமைகளில் (காணிகள் மற்றும் பொது இடங்களில்) தமது முன்னரண்களை நிறுவினர். இன்று அவற்றை எல்லாம் இராணுவப் பிரதேசம் என்னும் பெயரில் சர்வாதிகாரதனமாகக் கைப்பற்றியுள்ளனர்.

சமாதானம் ஏற்படுவதை விரும்பாததாலோ அல்லது சமாதானத்தை விரும்பாத சக்திகளுக்கு விலை போனதாலோ அல்லது தீவுப்பகுதியில் தங்

(12ஆம் பக்கம் பார்க்க)

# 'சிவகலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு



மாலை அமர்வு தலைமையுரையை அருட்கவி சீ.விநாசித்தம்பி நிகழ்த்துகிறார். மாநாட்டில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.



விருது பெறுவோர் இடமிருந்து வலமாக வி.கே.நடராசா (இசை), ச.பஞ்சாட்சரசர்மா (வடமொழி தமிழ் - அவரது மகன் பெறுகிறார்), ந.சிவசண்முகமூர்த்தி (கதாபிரசங்கம்), நா.கணபதிப்பிள்ளை (வில்லிசை - அவரது மகள் பெறுகிறார்).



விருது பெறுவே... மாக ஆர்.திருஞானசம்பந்தன் (பண்ணிசை), உ.ராதாகிருஷ்ணன் (வயலின் - அவரது மகள் பெறுகிறார்), வை.சிவசுப்பிரமணியம் (ஓவியம்), தி.பொ... ணபடனம்).

✵ தமிழர் தாயகம் ✵ சுயநிர்ணய உரிமை ✵ தமிழ்த் தேசியம்

# தமிழர்களின் நீண்டநாள் அபிலாஷையை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும்

## சைவமாநாட்டின் முடிவில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே6

தமிழர்களின் நீண்ட நெடுநாள் அபிலாஷையான தமிழர்தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் ஆகியவற்றை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று இந்து சமயப் பேரவை கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்கள் நடத்திய சைவ மாநாட்டின் முடிவில் இந்தத் தீர்மானத்தை இந்து சமயப் பேரவை நிறைவேற்றியுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளை முழுமனதுடன் வரவேற்பதுடன், தமிழர்களின் நீண்ட நெடுநாள் அபிலாசையான தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழத் தேசியம் ஆகியவற்றை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்றும் இவற்றைப் பெறுவதற்கு ஆத்மீகரீதியில் சகல வளங்களையும் வழங்குவதென்றும் இச்சமாதானச் சூழ்நிலை தீர்க்கப்படாத இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதென்பதை உணர்ந்து இலங்கை அரசாங்கமும் சகல அரசியற் கட்சிகளும் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்காது போரை முன்னெடுப்பதை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்ட இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைப் பாராட்டுவதுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுக்களைத் தொடக்க நோர்வே அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி வலுப்பெற்று வளர்ந்தோங்கக்கூடிய சகல தார்மீக வளங்களையும் இந்திய அரசு தாராளமாக வழங்கவேண்டுமென்றும் இதற்கு அனுசரணையாகத் தமிழ்நாடும், தமிழக அரசும் தாய்மையுணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக கோருகின்றோம்.

★ எமது மக்கள் இந்தியாவிலுள்ள புனித தலங்களுக்குச் சென்று தமது ஆத்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவும் இருநாட்டிலுள்ள சைவத்தமிழ் அறிஞர்கள் கருத்துப் பரிமாறுவதற்கு வந்து செல்வதற்கு உதவியாகவும் எமது நாட்டிற்கும் இந்தியத் திருநாட்டிற்கும் இடையேயான விமானப் போக்குவரத்தைப் பலாலியூடாகவும் கப்பல் சேவைகளைத் தலைமன்னார் ஊடாகவும் தாராளமாக ஏற்படுத்துமாறு இலங்கை அரசையும் இந்திய அரசையும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள்முதல் கைதுசெய்யப்பட்டு இதுவரை நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் சகல இளைஞர்களையும், யுவதிகளையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் இவர்களுடைய தற்போதைய நிலையைப் பெற்றோர்களுக்கு உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமெனறும் இவ்விதம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையைத் தொடருவதற்கு தேவையான பண உதவிகளைக் காலந்தாழ்த்தாது உடனடியாக வழங்கவேண்டுமென்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள்முதல் சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாகி இடம்பெயர்ந்து சோகக் கடலில் ஆழ்ந்து வாழும் சகல மக்களுக்கும் வேண்டிய போதுமான நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறும் இவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்று மீளக்குடியமரக்கூடிய சகல ஏற்பாடுகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறும் சாதாரண வறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீடு புனரமைப்பதற்கான நஷ்டஈட்டுத் தொகையை ரூபா 25ஆயிரத்தில் இருந்து அதனை ரூபா ஒரு லட்சமாக அதிகரிக்குமாறு இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ நடைபெறும் போரால் தொழில் வளங்களை இழந்தவர்களுக்கு மீளவும் தொழில் வளங்களை ஆரம்பிப்பதற்கும் தொழில் நிறுவனங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் ஏற்ற உதவிகளை உடனடியாக வழங்குமாறு இலங்கை அரசை இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ தற்போது நடைபெறும் போர் காரணமாக விதவைகளாயும் அநாதைகளாயும் அங்கவீனர்களாயும் அவல வாழ்வு வாழ்வோர்க்கு அவர்களுக்கேற்ற மறுவாழ்வுத் திட்டங்களை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டிய உரிமைகளை வழங்காத காரணத்தினாலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போரில் பகுதியாக அல்லது முழுமையாக அழிக்கப்பட்டு பூசை, வழிபாடுகள் இன்றிப் பூட்டப்பட்டிருக்கும் சகல ஆலயங்களையும் புனரமைப்புச் செய்து வழிபாட்டுக்குத் திறந்து விடுமாறு கோருவதுடன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் வாபஸ் பெறுமாறும் பாதுகாப்புக் காரணங்களைச் சாட்டாக வைத்து மட்டுப்படுத்தப்பட்ட முறையில் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட சகல ஆலயங்களுக்கும் மக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபடக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசை இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ போர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து இந்து நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்து அவை புத்துயிர்பெற்று இயங்கக்கூடிய வகையில் சகல வளங்களையும் தாராளமாக வழங்குமாறு இலங்கை அரசைப் பகிரங்கமாக இம்மாநாட்டில் கோருகின்றோம்.

★ எமது ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு சைவ விவகாரக்குழு ஒன்றை சைவ பீடங்களையும் சைவ நிறுவனங்களையும் உள்ளடக்கி அமைப்பதென்றும் இக்குழுவே அப்பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்றும் இதற்கு சகல தரப்பினரும் தமது பரிபூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ எமது அருளாளர்கள் எழுதிய பக்தி எழுச்சிப் பாடல்களைக் கொச்சைப்படுத்தக்கூடிய வகையில் பத்திரிகைகளில் வெளிவரும் ஆக்கங்களை சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் தமது ஆக்கங்களை எமது மத, மொழி மறுமலர்ச்சிக்கு உந்து சக்தியைக் கொடுக்கக்கூடியவகையில் அமைத்துக்கொள்ளவேண்டும் என்றும் இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ எமது மக்களிடையேயுள்ள ஏழ்மை நிலையைப் பயன்படுத்தித் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் மதமாற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் தர்மப் பணிகளை இனமத மொழி கடந்த நிலையில் மேற்கொள்வதுடன் இத்தகைய மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்டவர்களை இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

★ எமது மதம் சம்பந்தமான உயரிய புனிதமான தத்துவ நூலான சைவ சித்தாந்த சாஸ்திரங்களை விமர்சிப்பதையும் அவற்றைச் சைவ அனுஷ்டானங்கள் இன்றிப் போதிப்பதையும் நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட கிறிஸ்தவக் குழுவை இம்மாநாட்டில் பகிரங்கமாகக் கோருகின்றோம். (க-4)

## வடக்கு - கிழக்கில் மீளக்குடியமரவுள்ள சிங்கள மக்களுக்கு அதிரடிச் சலுகைகள்

### அமைச்சர் நூர்தின் மசூர் அறிவிப்பு

கொழும்பு,மே6

வடக்கு - கிழக்கில் மீளக்குடியமர விரும்பும் சிங்கள மக்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவாக உடனடியாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படும் என்று வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தின் மசூா அறிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு - கிழக்குப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சிங்களவர்கள அனைவரும் தத்தமது பகுதிகளில் மீளக்குடியமர்வதில் ஆட்சேபனை எதுவுமில்லை என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

எனவே மீளக்குடியமர விரும்பும் குடும்பத்தவர்களின் பெயர் விவரங்கள் முதலில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் பதிவு செய்யப்படும்.

தொடர்ந்து இழப்பீட்டுக் கொடுப்பனவுடன் மேலதிகமாக வீடுகளைப் புனரமைப்பதற்கென ரூபா 15 ஆயிரமும், விசேட கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

அரச ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவியும் வழங்கப்படவுள்ளது - என்றார் அமைச்சர். (எ)

## பளையில் 'தவம்' கிடக்கும் மக்கள் இரவுச் சாப்பாட்டுக்கு பெரும்பாடு!

தென்மராட்சி,மே6

முகமாலை சோதனை நிலையம் தினமும் மாலை 5.00 மணியுடன் மூடப்படுவதால் வன்னியூடாக வரும் பெருமளவு பயணிகளும், வாகனங்களும் பளையில் தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

தினமும் 300க்கு மேற்பட்ட பயணிகளும், 35க்கு மேற்பட்ட பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களும் பளையில் தரித்து நிற்பதாகவும், பளையில் தங்குவோர் இரவு உணவுக்கு சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சோதனை நிலையம் மூடப்படும் நேரத்தை மாலை 6 மணிவரை நீடிகக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் பயணிகள் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## நாவுக்கரசு நாயனாரின் குருபூசை

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.சைவபரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை தின நிகழ்வுகள் இன்று காலை 9 மணிமுதல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (எ)

☆ ☆ ☆

திருநாவுக்கரசர் குருபூசையை ஒட்டி விசேட நிகழ்ச்சிகள் இன்று முற்பகல் 11மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை மாணவரின் தேவார ஓதல், சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். (க-3)

☆ ☆ ☆

வலி.தெற்கு,மே6

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை இந்து மாணவர் மன்றத்தினரால் இன்று காலை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் சமூக ஜோதி கா.கணேசதாசன் "அடிமை நெறியில் ஆண்டவனை அடைந்த அப்பர்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார். (க-152)

## நிரந்தர நியமனம் குறித்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஆளுநரைச் சந்தித்துப் பேசுவர்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் பணிமனையின் முன்பாக தொடர்ச்சியாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரை நேரில் சந்தித்து தமது நிரந்தர நியமனம் குறித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் யாழ்.மாவட்டப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பட்டியல் ஒன்றும் ஆளுநரிடம் கையளிக்கப்படவுள்ளது.

எனவே ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய சகல ஆசிரியர்களும் இன்று யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு முன்பாக வருகை தந்து தமது பெயர், விவரங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

## வன்னிக் காளைகள் வருகின்றன; இனி வீதிக்கு வரும் வண்டில்கள்!

குடாநாட்டில் பல வீடுகளின் கொட்டில்களில் வருடக் கணக்கில் உறங்கிக்கொண்டிருக்கும் வண்டில்கள் விரைவில் வீதிகளுக்கு வரவுள்ளன.

வண்டில்களுக்கென தினமும் நூற்றுக்கணக்கான ஏரிணை காளை மாடுகள் வன்னியிலிருந்து கால் நடையாக முகமாலையூடாகக் கொண்டு வரப்படுகின்றன.

குடாநாட்டுக்கு வண்டில் மாடுகள் கொண்டுவரப்படுவதால் காளை மாடுகளின் விலைகள் வன்னியில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வியாபார வண்டில்களுக்கு பயன்படுத்தும் காளை மாடுகள் சோடி 6ஆயிரம் ரூபா தொடக்கம் 35 ஆயிரம் ரூபாவரை விலை போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு தொழில்நுட்பவியலாளர் இருவர் நியமனம்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.ஆஸ்பத்திரிக்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் இருவர் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான லோ.துஷிதரன், செல்வி க.சோமசுந்தரம் ஆகிய இருவருமே இவ்வாறு நியமனம் பெற்றவர்களாவர். (எ)

## இலக்கியப் போட்டிகளில் யாழ்.கல்வியியற் கல்லூரிக்கு 2இடங்கள்!

யாழ்ப்பாணம்,மே6

ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பகம் கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையில் நடத்திய இலக்கியப் போட்டிகளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இரு இடங்களைப் பெற்றுள்ளது.

தமிழ் இலக்கிய ஆக்கங்கள் தொடர்பான போட்டியில் தயாளினி சத்தியநாதன் முதலாம் இடத்தையும-

ஆங்கில இலக்கிய ஆக்கங்கள் தொடர்பான போட்டியில் சிறிவித்தியா கோபாலகிருஷ்ண ஐயர் இரண்டாம் இடத்தையும் - பெற்றுள்ளனர்.

இந்த இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களிடையே தெரிவு ஒன்று நடத்தப்பட்டு இருவருக்கு ஜேர்மனி செல்ல புலமைப்பரிசில் வழங்கப்படவிருக்கின்றது. (க-3)

## நூதன மூர்த்திகள் வீதி உலா

யாழ்ப்பாணம்,மே6

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபரீஸ ஐயப்பன் ஆலய நூதன மூர்த்திகள் தெருவீதி உலா இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவிருக்கிறது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இருந்து ஊர்வலமாக நூதன மூர்த்திகள் எடுத்துவரப்படும்.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்த ஊர்வலத்தில் குருமார்கள், பக்தர்கள் கலந்துகொள்வர். (க-12)

## உலக செஞ்சிலுவை தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே6

உலக செஞ்சிலுவைத் தினமான நாளைமறுதினம் 8 ஆம் திகதி இலங்கை-செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகளிலும் சிரமதானம், இரத்ததானம், மரம் நடும வைபவம், வைத்திய முகாம் ஆகியன இடம்பெறவுள்ளன.

யாழ்.கிளையின் அலுவலகத்தில் அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கூட்டமும் கலை நிகழ்வுகளும் நடைபெறவிருக்கின்றன.

கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரதமவிருந்தினராகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி சிசிலி குறோஸ், யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (க-3)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வேலி தெற்கு, அம்மன் வீதி, பிள்ளையார் வீதி, சட்டநாதர் வீதி, இராமலிங்க வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் நாளைமறுதினம் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன. என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## முதலாம் ஆண்டில்
## அன்புடன் நினைவு கூருகின்றோம்

தோற்றம்
30
10
1945



மறைவு
06
05
2001

## அமரர் கனகையா நந்தகுமார்

(நிர்வாக முகாமையாளர், 'உதயன்' பணிமனை)

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓராயிரம் நினைவுகளுடன்
நிதம் கலங்கி நிற்கின்றோம்.

37,முதலியார் ஒழுங்கை,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(C-22026)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



## ஓராண்டு நிறைவில் உத்தமரை நினைவுகூருவோம்

மண்ணுக்கு
வந்த நாள்
30
★
10
★
1945



விண்ணுக்கு
விரைந்த நாள்
06
★
05
★
2001

'உதயன்' நிர்வாக முகாமையாளர்

## அமரர் கனகையா நந்தகுமார்

அன்புக்கு இலக்கணமாய் அகிலத்தில் வாழ்ந்தீர்!
பண்புக்கோர் உறைவிடமாய் பாருலகில் திகழ்ந்தீர்!
எங்களுடன் பழகிவிட்டு ஏனையா மறைந்தீர்?
எந்நேரமும் புன்சிரிப்புடன் எழிலாக வருவீர்!
நகைச்சுவையுடன் பேசி நம்மைச் சிரிக்க வைப்பீர்!
நாளும் உமை நினைந்தே கலங்கிடவும் செய்தீர்!
ஓராண்டு மறைந்ததுவோ? உதயனை விட்டுச் சென்று!
உளமாரத் துதிக்கின்றோம் பெறுக ஆத்மசாந்தி!

(C-22027)

-'உதயன்' ஊழியர்கள்



## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

விலை ரூ.1,90,350/= இல் இருந்து மேல் (GST உட்பட)

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175

**பிரதேச கிளை அலுவலகங்கள்:**
- 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146, 08-238133-5
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ. பே: 041-27488, 041-28488, 041-28999
- நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997, 063-23662
- 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-22676
- தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389

பெயர்:
விலாசம்: ..............................................................
சேவை நிலையம்: .............................................. தொலைபேசி: ..............................

**பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விவரங்களை அனுப்பிவையுங்கள்.**

(சி-22025)

உதயன்

## ஜனாதிபதியின் வித்தை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு சாவுமணி அடிப்பது என்று பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி - குறிப்பாக அந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) போன்றவை - தீர்மானித்துவிட்டன என்று தெரிகின்றது.

அமைதிக்கான சமாதான முன்முயற்சிகளின் முதற்படிதான் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை.

அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற அத்திவாரத்தில்தான் சமாதான முயற்சிகள் என்ற கட்டடம் கட்டி எழுப்பப்படவேண்டும். அதற்கான ஆயத்தங்கள் முழுமூச்சில் நடக்கின்றன.

ஆனால், அத்திவாரத்தையே அடியோடு பெயர்க்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகிவிட்டார் என்பதை அவரது பிந்திய நிலைப்பாடுகள் தெளிவு படுத்துகின்றன.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு தீர்வு காணப்படாமல் - தீர்வு காணப்படமுடியாமல் - நீண்ட பல வருடங்களுக்கு, பல தசாப்தங்களுக்கு அது இழுபட்டுப்போவதற்கு காரணகர்த்தர்களாக விளங்கியவர்களில் முக்கியமானவர்கள் பௌத்த மத பீடத்தினர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இனப்பூசலுக்கு இணக்கத்தீர்வு காண காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட நன்முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறியும் கைங்கரியத்தை சாதித்து வந்தவர்கள் இந்த பௌத்த மத பீடத்தினர்தான்.

எனவே, இம்முறை தனது சமாதான முயற்சிகளின ஆரம்பத்திலேயே சமாதானத் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தையும், தவறினால் நாட்டுக்கும், மக்களுக்கும், பொருளாதாரத்துக்கும் ஏற்படக்கூடிய பேராபத்தையும் பௌத்த பீடத்தினருக்கு விளக்கினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. மல்வத்தை, அஸ்கிரிய, ராமயநிக்காய பீடங்களின் பீடாதிபதிகளுக்கு தனது செயற்பாடு, நோக்கம் என்பவற்றை விளக்கி, தமது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் கணிசமான வெற்றியும் கண்டார் அவர்.

ஆனால், அதே பௌத்த மத பீடத்தைக் கொண்டு சமாதான முயற்சிகளை அடித்து நொறுக்க ஜனாதிபதி குமாரதுங்க திட்டமிட்டிருப்பதாகப் படுகின்றது. ஜனாதிபதி செயலக அறிக்கையை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் வெளியிட்ட தகவல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

"அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டினால் நாட்டுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி அஞ்சுகின்றார். எனவே நாட்டையும் அதன் இறைமையையும் காப்பாற்றுவதற்காக தமக்குள்ள முழு அதிகாரங்களையும் பயன்படுத்த அவர் முடிவு செய்திருக்கின்றார். பௌத்த மதத் தலைவர்களுக்கு தாம் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலே ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்." - இப்படி ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவித்திருக்கின்றது.

நாட்டின் இறைமையையும், மக்களையும் காப்பதற்கு நாட்டின் தலைவி என்ற முறையில் மட்டுமல்லாமல் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் தன்னால் இயன்ற சகல நடவடிக்கைகளையும் எடுப்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருக்கின்றது.

இக்கூற்று, அரசியல்ரீதியாக மட்டுமல்லாமல், படையினரின் நடவடிக்கைகள் மூலமாகவும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வேட்டு வைக்கும் செயற்பாட்டில் அவர் இறங்கப்போகின்றார் என்ற எண்ணத்தை - சந்தேகத்தை - ஏற்படுத்தியிருக்கின்றது.

தனது சமாதான விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், அதை செயற்படுத்தவும் காலங்காலமாக அத்தகைய போக்குக்குத் துணை நின்று வரும் பௌத்த பீடத்தின் உதவியை ஜனாதிபதி நாடியிருப்பதில் வியப்பேதும் இல்லை.

அடுத்துவரும் நாள்களில் - அல்லது வாரங்களில் - தாம் எடுக்கப்போகும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு இந்திய உப கண்டத்தின் ஆதரவை முன்கூட்டியே திரட்டுவதற்கும் அவர் தயாராகிவிட்டார். அதற்காகவே தனது அணியில் இருக்கும் பேரியல் அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன, சகோதரர் அனுரா பண்டாரநாயக்க போன்றோரை இந்தியாவுக்கு அனுப்புகின்றார் அவர்.

ஜனாதிபதியின் தற்போதைய முயற்சி 'கரணம் தப்பினால் மரணம்' என்ற விளையாட்டு - வித்தை - போன்றது.

இந்த முயற்சியில் அவர் வென்றால் சிங்கள தேசம் கெட்டு குட்டிச் சுவராவது நிச்சயம்; ஆனால், தெற்கில் அவரது அரசியல் வாழ்வு சில காலத்துக்குத் தப்பிப்பிழைக்கும்.

இந்த முயற்சியில் அவர் தோற்றால் நாடு தப்பிப் பிழைக்கும். ஆனால், அவரது அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிடும்.

### விரிவுரையாளர் பற்றாக்குறை; தளபாட வசதிகள் இல்லை; - இந்நிலையில்

# கூடிய எண்ணிக்கையான மாணவரை எப்படி தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுமதிப்பது?

## இப்படிக் கேட்கிறார் அதிபர்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு போதிய விரிவுரையா[illegible]மிக்கப்படுவதில்லை. அதேசமயம் தளபாட, கட்டட வ[illegible] போதா. இந்த நிலையில் எப்படி கூடிய எண்ணிக்கை[illegible]ணவர்களை அனுமதிக்கமுடியும்.

[illegible]ட்பக் கல்லூரி அதிபர் இவ்வாறு கேள்வி எழுப்புகின்[illegible]

புதிய [illegible]மதியின்போது தொழில்நுட்பக் கல்லூரிக்குக் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லையே ஏன்? என்று எமது செய்தியாளர் அதிபரிடம் கேட்டபோதே அதிபர் இந்தக் கேள்வியைத் திருப்பிக் கேட்டார்.

இது குறித்து அதிபர் எமது செய்தியாளரிடம் விவரித்த போது கூறியதாவது:-

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு நீண்டகாலமாக நிரந்தர ஆசிரிய நியமனங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. நூற்றுக்கும் அதிக மாணவர்கள் வருகைப் போதனாசிரியர்களாகவே உள்ளனர். 17 பேர் மாத்திரமே நிரந்தர நியமனம்பெற்ற விரிவுரையாளர்கள். இதைவிட எழுதுவினைஞர்கள் பற்றாக்குறையும் நிலவி வருகின்றது.

மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, இன்று பல வசதிக் குறைபாடுகளின் மத்தியிலேயே இயங்கிவருகின்றது. இதுபற்றி கல்வி அமைச்சுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகளில் வழங்கப்படும் ஆசிரியர்களுக்கான புலமைப் பரிசில்களோ, மேல்நாட்டுக் கற்கை வசதிகளோ செய்து கொடுக்கப்படுவதும் இல்லை.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கும் இக்கல்லூரியில் 24இற்கும் மேற்பட்ட பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடநெறிக்கும் புதிதாக மாணவர்களை நியமிக்கும் போது நூற்றுக்கணக்கான மாணவர்கள் விண்ணப்பிக்கின்ற போதிலும் வெகுசிலரையே அனுமதிக்க முடிகிறது. உண்மையில் இடநெருக்கடியுடன், விரிவுரையாளர், உபகரணங்கள் பற்றாக்குறையும் காரணமாக அமைகின்றன.

இக்கல்லூரி 20 வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது போன்ற ஓர் எண்ணப்பாட்டையே தோற்றுவிக்கிறது. கல்லூரிக்குரிய காணிகள் சில இன்னும் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருக்கின்றன. அதேசமயம் மேலதிக கட்டடங்களைக் கட்ட போதிய இட வசதியும் இல்லை - என்றார். (க-12)

# வன்னியில் கல்வி, சுகாதாரத்தை முன்னேற்றவேண்டியது அவசியம்

## அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவிப்பு

வவுனியா,மே6

வன்னியில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றின் முன்னேற்றம் மிகவும் மோசமானதாக இருக்கிறது. அவற்றை முன்னேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால யுத்தத்தினால் வன்னியில் பல அத்தியாவசிய தேவைகள் பாதிப்படைந்து பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானதாக - உடனடியாக மாற்றுவழி கண்டுபிடிக்கப்படவேண்டியதாக அமைந்திருப்பது கல்வி, சுகாதார நடவடிக்கைகள் ஆகும்.

இந்த நிலை மேலும் சில காலங்களுக்கு நீடித்திருந்தால் வன்னியில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும் - என்றார். (க-4)

# முற்றவெளி எரிபொருள் நிலையத்தில் இன்றுமுதல் பெற்றோல் விநியோகம்

அரியாலை,மே6

முற்றவெளிப் பகுதியில் அமைந்திருக்கும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் பாவனையாளர்கள் பெற்றோல் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சங்கத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

மேற்படி நிலையத்தில் சேதமடைந்திருந்த பெற்றோல் நிரப்பும் நிலத்தடித் தாங்கி புனரமைக்கப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி நிலையத்தில் உள்ள மண்எண்ணெய் நிரப்பும் நிலத்தடித் தாங்கி சேதமடைந்துள்ளது. (ஐ-17)



கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த கடற்றொழில், நீரியல்வளங்கள் அமைச்சர் மஹிந்த விஜேசேகரவுக்கு யாழ்.பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை உரைநிகழ்த்துவதையும் யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், கடற்றொழில் நீரியல்வளங்கள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர மற்றும் அவருடன் வருகைதந்த அமைச்சின் அலுவலர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ம-51)

# வாகரைச் சம்பவத்துக்கு கூட்டமைப்பு கண்டனம்

மட்டக்களப்பு,மே6

கடந்த புதன்கிழமை வாகரைக் கடலில் இடம்பெற்ற சம்பவத்தை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்தச் சம்பவமானது தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பனவற்றைக் குழப்பும் ஒரு சதி நடவடிக்கை எனவும் -

விடுதலைப் புலிகளின் ஆயுத வள்ளம் ஒன்று வெடித்துச் சிதறியதாகக் கடற்படையினரால் வெளியிடப்பட்ட தகவல் 'முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைக்கும்' ஒரு நடவடிக்கை எனவும் -

மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

# மக்களையும் நடிகர்களுடன் இணைத்ததுதான் நடிகமணி வைரமுத்து செய்த புதுமையாகும்

## பவளவிழா நிகழ்ச்சியில் உரை

வலி.தெற்கு,மே6

மக்களையும் பார்வையாளர்களையும் நடிகர்களுடன் இணைத்து வைத்த செயல்தான் "நடிகமணி வைரமுத்து நாடக அரங்கில் செய்த புதுமையாகும்"

காங்கேசன்துறை அமரர் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவின் பவள விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச செயலாளர் செ.மெற்றாஸ்மயில் மேற்கண்டவாறு கூறினார்.

காங்கேசன்துறை நடிகமணி வைரமுத்து வசந்தகான சபையின் ஏற்பாட்டில் யூனியன் கல்லூரி கலையரங்கில் (மருதனார் மடம்) பவளவிழா நிகழ்வு இடம்பெற்றது.

கலைஞானகேசரி வ.செல்வரட்ணம தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செ.மெற்றாஸ்மயில் மேலும் கூறியதாவது:-

நாடகக் கலைஞர்களை ஒன்று சேர்த்து நாடகங்களை நடத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியபோதிலும், பல கலைஞர்களை ஒன்றுசேர்த்து இலங்கையின் பல பாகங்களிலும் பலமுறை தமது நாடகங்களை அரங்கேற்றியவர் நடிகமணி வைரமுத்து.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களில் மட்டுமல்லாது அமரர் இலங்கையர்கோனால் அறிமுகப்படுத்தப்பட்டு சிங்களப் பிரதேசங்களில் நாடகங்கள் நடத்தி சிங்கள மக்கள் மத்தியிலும் பாராட்டுப் பெற்றவர்.

இன்றைய நாடக நடிகர்கள் மக்களுடன் தொடர்பு இன்றி மேடை நாடக நடிப்புடன் மட்டும் நின்றுவிடுகினறார்கள். ஆனால் நடிகமணி வைரமுத்து மக்களை தம்முடன் இணைத்து தொடர்பை ஏற்படுத்திக்கொண்டவர். நாடக அரங்கில் அவர் செய்த புதுமை இதுவாகும்.

பிறவிக்கலைஞனான வைரமுத்து, நடிப்புத்துறையில் பல புதிய யுக்திகளையும் நுட்பங்களையும் புகுத்தி "வைரமுத்து பாணி" என்ற ஒரு நிலையை தோற்றுவித்தார். தனித்துவம், தற்துணிவு கொண்டு தமக்கென ஒரு பாணியை அமைத்துக கொண்ட வைரமுத்து, தன்னால் முடிந்த பயிற்சிகளை சக நடிகர்களுக்கும் வழங்கி தன் திறமைகளை அவர்களுடன் பகிர்ந்துகொண்டவர். அவரால் வழங்கப்பட்ட பயிற்சிகள் தான் இன்றும் பல நாடக நடிகர்களை நம் மத்தியில் வாழ வைத்து வருகிறது - என்றார்.

நாட்டிய கலைமாணி திருமதி சர்மிளா கௌரிஹராசன், திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், கு.தெய்வேநதிரன், எஸ்.ஆர்.யேசுபாலன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

நடிகமணியுடன் இணைந்து பல நாடக மேடைகளில் நடித்த கலைஞர்களான சீரணி வி.என்.செல்வராசா மற்றும் வ.பூதப்பிள்ளை, க.உருத்திராபதி, வி.கே.இரத்தினம், கனகரட்ணம் ஆகியோர் விழாவில் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-152)

### நாளை

சித்திரை 24
செவ்வாய்க்கிழமை
(07.05.2002)
திதி : தசமி
முற்பகல் 9.28 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி முழுவதும்
அக்கினி நாள் ஆரம்பம்
சுபநேரம்: 10.25 - 11.55
ராகுகாலம்: 2.55 - 4.25
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கையில் மிஞ்சியதைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதைப் போன்ற ஆதாயம் வேறில்லை.

# சமாதான முயற்சிகளை எதிர்த்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

**உலக மகளிர் நடவடிக்கைகள் தொடர்பான ஐ.நா. அமைப்பில் உயர் பதவியை வகிக்கும் ராதிகா குமாரசுவாமி இனவிவகாரங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் பணிப்பாளராவார்.**

**நோர்வே அரசின் அனுசரணையுடன் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்து 'லங்காதீப' வார இதழுக்குப் பேட்டியொன்றை வழங்கியுள்ளார். அந்தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* சிறிலங்கா அரசும் புலிகள் அமைப்பும் சமாதான முயற்சிகளில் இறங்கியுள்ளன. எமது நாட்டில் சமாதானம் உருவாகுமா?

*பதில்:* தற்போது சமாதானத்தை உருவாக்குவதற்கான பொருத்தமான சூழ்நிலை உருவாகியுள்ளது. நாங்கள் எதிர்நோக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். உதவவேண்டும். நாம் எல்லோரும் எல்லா விதத்திலும் உதவி செய்யவேண்டும்.

அது சமாதானமாக அமைய வேண்டும் யுத்தமாக அமையக்கூடாது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் சமாதானத்திற்கு வரவேண்டும். அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அனைத்துச் சமூகமும் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

*கேள்வி:* இரு தரப்பினருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாடு இதற்கு வழிவகுக்குமா?

*பதில்:* ஆம் உண்மையில் அது நல்ல வழியை அமைக்கும். அதில் நல்ல சரத்துக்கள் உள்ளன. உதாரணமாக அதன் இரண்டாம் பகுதியைப் பாருங்கள். இயல்பு நிலையை உருவாக்குவது தொடர்பான சரத்தில் சர்வதேச சட்டங்களுக்கு உடன்பாடானது. சாதாரண மக்களை வதைத்தல், தொடர்ந்து தொந்தரவு செய்தல், ஆள்களைக் கடத்துதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கடுமையான கவனத்திற்கு உள்பட்டுள்ளது.

*கேள்வி:* சமாதானத்தை உருவாக்கும் [illegible] யத்தில் எம்முன் இருப்பது [illegible] சந்தர்ப்பமா?

*பதில்:* இல்லை, அப்படி நினைக்க [illegible] இன்று முடியாவிடினும் [illegible] சமாதானத்தை நாம [illegible] நேரிடும். மிகவிரைவில் சமாதானத்தை உருவாக்குவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எப்போது ஆயினும் எமக்கு [illegible] தேவையே.

*கேள்வி:* ஜனாதிபதி சந்திரிகா [illegible]வுக்கும் பிரதமர் ரணில் [illegible]வுக்கும் இந்தப் பணியை [illegible] முடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* இருவருக்கும் இடையில் [illegible] கருத்து வேற்றுமைகள [illegible] சமாதானம் [illegible] அண்மைக் காலத் [illegible] சமாதான நடவடிக்கைகளை [illegible] ஜனாதிபதியே. தமிழ் [illegible] கௌரவத்துடன் கூடிய [illegible] இருவரும் வழங்குவதாயின் [illegible] கட்சிகளுக்குள் நிலவும் கருத்து வேற்றுமைகளை வென்றெடுக்கவேண்டும். ஐ.தே. கட்சியும் பொ.ஐ.முன்னணியும் எதிர் உணர்வுகளை மறந்து எம் முன்னுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்பை நம்பலாமா? அவர்கள் சமாதானத்திற்காக அர்ப்பணிப்பார்களா? அவர்கள் நம்பகத் தன்மையுடையவர்களா?

*பதில்:* பல ஆண்டுகளாக ஆயுதமேந்திய ஓர் அமைப்பிற்கு சமாதான நடவடிக்கைகளில் திடீரென இறங்குவது சிக்கலான விடயமாகும். அவ்வாறான அமைப்பு ஒன்றிடம் இருந்து அனைத்தையும் ஒரே நேரத்தில் எதிர்பார்க்க முடியாது. நியாயமாகச் செயற்படுவதே இரு தரப்பினரதும் கடமையாகும். விடயங்களை நியாயமாகவும் நேர்மையாகவும் [illegible] கொள்ளவேண்டும்.

*கேள்வி:* நல்லது. [illegible] காரணத்தினால் விடுதலை [illegible] சமாதான நடவடிக்கைக[illegible] வெளியேறினால் என்ன நடக்கும்.

*பதில்:* இரு தரப்பினரும் எப்போதே உண்மை நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். பாருங்கள் விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றினார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியவில்லை.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகிச் சென்றால் அமெரிக்கா உட்பட அமைப்புகள் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு யுத்தம் அல்ல அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றது. சர்வதேச சமூகம் சமாதானம் யதார்த்தமாவதைக் காண அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அவற்றை எதிர்த்து ஏதாவது அமைப்பு செயற்பட்டால் கடுமையான எதிர்த்து ஏதாவது அமைப்பு செயற்பட்டால் கடுமையான எதிர் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

*கேள்வி:* புலிகளின் தலைவரின் வன்னி பத்திரிகையாளர் மாநாடு குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அவர் அரசியல்வாதியாக வருவதற்கு எடுக்கும் முயற்சிகள் அதில் தெரிகின்றனவா?

*பதில்:* அவர்கள் ஒருபோதும் தமது நிலையை மாற்றமாட்டார்கள் என ஒருசிலர் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் தங்கள் நோக்கத்தை மாற்றுவர் என ஒரு சிலர் தெரிவிக்கின்றனர். அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டை நான் முழுமையாகப் பார்க்காதபடியால் மேலதிகமாக என்னால் எதையும் கூறமுடியாதுள்ளது.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் தமது நிலையை மாற்றமாட்டார்கள் என நீங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:* கடந்த காலத்தில் அந்த அமைப்புக் குறித்து நான் வேறான கருத்தைக் கொண்டிருந்தேன். பாரதூரமான பிரச்சினைகள் இருந்தன. இருப்பினும் அவர் மாறமாட்டார் எனச் சிந்திப்பது யதார்த்தமாகாது.

*கேள்வி:* அவர்கள் ஈழத்தைக் கைவிடுவார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர்கள் ஈழத்தைக் கைவிடுவர் என நினைக்கமுடியாது. இருப்பினும் பேசுவார்கள். ஆரம்பமான பின்னர் ஈழத்திற்குப் பதிலான மாற்றீடு ஏதும் இருப்பினும் அவர்கள் ஈழத்தைக் கைவிடக்கூடும் என்பது எனது எண்ணமாகும். அதற்குத் தயாராவதற்கு அவர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்படவேண்டும். ஓராண்டோ இரு ஆண்டுகளோ தேவைப்படலாம்.

*கேள்வி:* தமிழ்நாட்டில் இருந்து புலிகளுக்கு அழுத்தங்கள் வருகின்றன. பிரபாகரன் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என முதலமைச்சர் ஜெயலலிதா கூக்குரலிடுகிறார். இந்த நடவடிக்கை சமாதான நடைமுறைகளை எவ்வாறு பாதிக்கும்?

*பதில்:* எந்தவொரு நாட்டிற்கும் தனது உரிமைக்காக செயற்பட உரிமை உண்டு. இதற்கமையவே தமிழ்நாடும் செயற்பட்டிருக்கலாம். இருப்பினும் அந்த நடவடிக்கைகள் சிறிலங்காவுக்குப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கமாட்டா. சிறிலங்காவின் சமாதான நடவடிக்கைகளுக்கு இதனால் பாதிப்புகள் ஏற்படும் என நான் நினைக்கவில்லை.

இந்தியா இதைவிட வேறு விதத்தில் நடவடிக்கை எடுக்கும் எனச் சிந்திப்பது கடினம். இருப்பினும் சிறிலங்கா அது குறித்துக் குழப்பமடையத் தேவையில்லை.

*கேள்வி:-* இந்தியாவின் குறிப்பாக தமிழ் நாட்டின் நடவடிக்கைகள் எங்களுக்குப் பிரச்சினையாக இராது என்றா நீங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:-* சிறிலங்காவின் சமாதான முயற்சிகளைக் குழப்ப இந்தியா நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நான் ஒருபோதும் சிந்திக்கவில்லை.

*கேள்வி:-* மரபுவழி தமிழ் அரசியல் கட்சிகள் விடுதலைப் புலிகள் அமைப்பினால் விழுங்கப்பட்டுவிட்டனவா? இல்லை எனில் அக்கட்சிகள் விடு[illegible] புலிகளுக்கு அடிபணிந்து [illegible]டுகின்றன போன்று தோன்று[illegible] நடுநிலைமை வகிக்கும் தமிழ்ப் [illegible]கள் விடுதலைப் புலிகள் அமைப்பால் ஒழிக்கப்பட்டுள்ளனரா?

*பதில்:-* தமிழ்த் தேசிய அமைப்பு மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் எதிர்பார்ப்புகள் முறிவடைந்துள்ளதாகத் தெரிகிறது. தமிழ்த் தேசியச் சிந்தனை என்பது பேச்சுக்களை மேற்கொள்வதும் அதன்மூலம் இணக்கத்தைக் காண்பதுமே என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் முன்னேற்றப்படுத்தப்படுவதும் நான் மிகுந்த நம்பிக்கை கொண்ட விடயங்களாகும்.

*கேள்வி:-* விடுதலைப் புலிகளுக்கு ஏதாவது விதத்தில் அழுத்தங்களைக் கொடுக்க வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அமைப்புகளுக்கு முடியுமா?

*பதில்:-* வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் குறித்து இருவித அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. பேராசிரியர் வலன்டைன் டானியேல் மற்றும் பேராசிரியர் எஸ்.ரி.தம்பையா ஆகியோர் அந்த இரு ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

1983 கறுப்பு ஜூலைக்குப் பின்னர் ஸ்ரீலங்காவை விட்டு வெளிநாடுகள் சென்றவர்கள் பற்றியது ஓர் ஆய்வு. 1987 இன் பின்னர் வெளிநாடுகளுக்குச் சென்ற ஏழைத் தமிழ் இளைஞர்கள் பற்றியது மற்றைய ஆய்வு. வெளிநாடுகளில் தங்களுக்கு வேலை வாய்பபுகளைப் பெற விடுதலைப் புலிகள் அமைப்பே உதவியது என அவர்கள் தெரிவிக்கிறார்கள். பல்வேறு குழுக்களில் பல்வேறு தரங்களில் சிக்கல் நிறைந்த பிரிவினராக அங்கு வாழ்கின்றனர். அவர்களது நோக்கங்கள் என்ன எனச் சரியாகக் கூறுவது கடினம்.

**தமிழில்: கஜனி**

*கேள்வி:-* போர்நிறுத்த உடன்பாடு சமாதானப் பணிகளுக்கு உதவியளிப்பதாக அமையுமா?

*பதில்:-* உண்மையில் அது மிகவும் உதவி அளிக்கும். சமாதான முயற்சிகள் வலுப்பெறுவது, அது எவ்வாறு முன்னெடுத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டில் மனிதநேய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது குறித்து சர்வதேச சமூகம் திருப்தியடைந்துள்ளது.

*கேள்வி:-* ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகள் இந்த உடன்பாடானது புலிகளுக்கு நாட்டைக் கையளிப்பதான ஆவணம் எனக் கூறுகின்றனவே?

*பதில்:-* இல்லை. அந்த ஆவணத்தை நான் அவ்வாறு கருதவில்லை. ஜே.வி.பிக்கு தனது எதிர்ப்பை வெளியிட இடமளிக்கப்படவேண்டும். அது அவர்களது உரிமை. அனைவருக்கும் தங்களது கருத்துக்களை வெளியிட உரிமை இருத்தல் வேண்டும்.

*கேள்வி:* ஜே.வி.பியின் அன்றைய தலைவர்களுக்கும் இன்றைய தலைவர்களுக்கும் இடையே இந்த விடயத்தை அணுகுவதில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரிகிறதா?

*பதில்:* தமிழ் மக்களுக்குத் தன்னாட்சி உரிமை இருக்கவேண்டும் என ஜே.வி.பி.பிரமுகர் லயனல் போப்பகே முன்பு தெரிவித்திருந்தார். றோஹண விஜேவீரவும் அந்தக் கருத்தைக் கொண்டிருந்தார். ஆனால் 1992இற்குப் பின்னர் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

*கேள்வி:* பல சிங்களப் பிரிவினர் விடுதலைப் புலிகள் குறித்து சந்தேகம் கொண்டுள்ளனர். அவர்களின் நேர்மை சந்தேகத்திற்குரியதா? அதனால் சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படாதா?

*பதில்:* விடுதலைப் புலிகளும் வேறு தமிழ் அமைபபினர்களும் தொடர்ந்து ஒரு பெரிய தவறை விடுகின்றனர். அவர்கள் சிங்களத் தலைவர்களுடன் மாத்திரமே பேச்சுக்களை மேற்கொள்கின்றனர். மகா சங்கத்தினருடனோ, ஜே.வி.பியினருடனோ, சிஹல உறுமயவுடனோ அல்லது சிங்கள மக்களுடனோ விடுதலைப் புலிகள் பேச்சுக்களை மேற்கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு குறித்து விடுதலைப் புலிகள் அவர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவை இடம்பெறவில்லை.

*கேள்வி:* அது காலங்கடந்துவிட்டது என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* இல்லை. தற்போதும் அந்தப் பேச்சுக்களை மேற்கொள்ளலாம். தென்பகுதியிலுள்ள பெரும்பான்மை மக்களுடன் கலந்துரையாடவேண்டும். அனைத்துப் பேச்சுக்களும் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். மூடிய நிலையில் பேச்சுக்கள் இடம்பெறுதல் ஆகாது.

*கேள்வி:* கடும் போக்குடையவர்களை அவ்வாறான பேச்சுக்கள் மூலம் மனம் மாறச் செய்யலாம் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* மாற்றமுடியும். காலத்திற்குக் காலம் பலர் தங்களது கருத்துக்களை மாற்றி வருகின்றனர். ஜே.வி.பியை எடுத்துக்கொள்ளுங் கள் 1980களில் வேறு கருத்தைக் கொண்டவர்களாக விளங்கினர். தற்போது வேறு கருத்தைக் கொண்டுள்ளனர். அமைப்புக்களினதும் மனிதர்களினதும் கருத்துக்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றன. ஜே.வி.பி. போன்ற அமைப்பு சமூக ஸ்திரத் தன்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும். அவ்வாறனவர்களை ஒருபோதும் ஒழிக்கமுடியாது. ஜனாதிபதி பிரமதாஸா காலத்தில் அமைக்கப்பட்ட இளைஞர் துயா துடைப்பு ஆணைக்குழுவில் நானும் ஓர் உறுப்பினராக இருந்தேன். அன்று இளைஞர்களுக்கு உரிய உரிமை, உரிய இடம் அளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

*கேள்வி:* செவிசாய்க்காதோரிடம் விடயங்களை கூறுவதால் பயன் ஏதும் கிட்டுமா?

*பதில்:* அவர்களுக்கு விடயத்தை விளக்குவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். அவர்கள் சிலவேளை செவிசாய்க்காமல் விடக்கூடும். இருப்பினும் முயற்சிகளைக் கைவிடக்கூடாது.

*கேள்வி:* ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான அரசியல் வேறுபாடுகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை பாதிக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* ஜனாதிபதி தடையாகவோ இடைஞ்சலாகவோ இருப்பார் என நான் நினைக்கவில்லை. இருவரும் குறுகிய அரசியல் வேறுபாடுகளை மறந்து பொது நோக்குடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவது மிகவும் முக்கியமாகும். ☆

# அறிவுரைகள் பல பகர்ந்த அன்னை ஈஸ்வரம்மா

**பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அன்னையாகிய ஈஸ்வரம்மாவின் குருபூசைத் தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் அன்னையாகிய ஈஸ்வரம்மா அவதாரங்களைத் தாமே தேர்ந்தெடுக்கினறார்கள்.

அன்னை ஈஸ்வரம்மா கிணற்றிலிருந்து நீரை அள்ளிக் குடத்தில் நிரம்பும்பொழுது, ஆகாயத்திலிருந்து ஒரு நீலப்பந்து ஒளி வெள்ளத்துடன் அவரை நோக்கி வருவதைக் கவனித்தார். அது நேராக அவர் மீது மோதி, நேரே அவரது கருப்பையில் இடம் கொண்டது. ஈஸ்வரம்மா கருவுற்றார் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவதாரம் செய்தார்.

தாயே ஒருவனது முதல் குரு. ஆகவே அவள் மதிக்கப்படவேண்டும. தாயின் அருளாசிகளின்றி இறைவனது கருணையை எவரும் பெற முடியாது. பகவான் சாயிபாபா மே மாதம் 6ஆம் திகதி அன்னையின் சமாதிக்குச் செல்கின்றார். அன்னையினது சொல்லுக்கு பெருமதிப்புக் கொடுக்கின்றார். அன்னையின் விருப்பப்படி புட்டபர்த்தியில் உலகிலே தலைசிறந்த அதிநவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக்கழகங்கள் வரை இவ்வாறு கட்டப்பட்டுள்ளன. இங்கு கல்வியுடன் ஒழுக்கம், மனித மேம்பாடுகள் போதிக்கப்படுகின்றன. ஆயிரம் கிராமங்களுக்கு மேல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோரை மதித்து அவர்கள் விருப்பப்படி வேண்டியதைச் செய்து அவர்களை மகிழ்விப்பவன் இறைவனின் ஆசீர்வாதத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்கின்றான் என பகவான் கூறுகின்றார்.

ஒருமுறை இறைவன் பாண்டுரங்கனே, புண்டரீகனை பரிசோதிக்க வந்தார். அவர் வந்த நேரம் புண்டரீகன் பெற்றோருக்குச் சேவை செய்யும் நேரம். பாண்டுரங்கன் புண்டரீ



கனை தன்னுடன் பாடி ஆடுமாறு அழைத்தார். புண்டரீகன் இறைவன் நிற்பதற்கு ஒரு செங்கல்லைக் கொடுத்துவிட்டு, தன் பெற்றோர்கள் உறங்கிய பின்னரே தான் வெளியெ


**சேவைப் பகுதி**
**பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், யாழ்ப்பாணம்.**

வரமுடியும் எனக் கூறினான். இறைவன் பாண்டுரங்கனும் செங்கல்லின் மேல் ஏறி நின்றவாறு காத்திருந்தார். பெற்றோர்களுக்குச் சேவை செய்யும் பக்தர்கள் முன் இறைவன் எந்நேரமும் காத்திருப்பான்.

லக்னோ நகரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு கிராமத்தில் இருந்து ஒரு பெற்றோர் தன் இரணடு ஆண்பிள்ளைகளை அடுத்திருக்கும் ஒரு நகரத்திற்குப் படிக்க அனுப்பி வைத்தனர். ஒருமுறை அந்தப்பிள்ளைகள் உயர் நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருக்கையில், பெற்றோர் அவர்களைச் சந்திக்க வந்தனர். அது புகையிரத நிலையம் என்பதைக்கூட கவனியாது மூத்த மகன் பெற்றோரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். இரண்டாவது மகன் அதை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இரண்டாவது மகனின் அலட்சியப்போக்கு தந்தைக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. தாயார் ஒருவாறு சமாதானப்படுத்தினார். மூத்தவன் சட்டப்படிப்பை முடித்து நீதிபதியானான். இளையவனால் சட்டப் படிப்பை தொடர்ந்து படிக்க முடியவில்லை. வருமானத் துறைப் பகுதியில் சாதாரண எழுத்தாளராகப் பணி புரிந்தான்.

ஒருமுறை தன் பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள் என தந்தை காணவந்தார். முதலில் நீதிபதியாக இருக்கும் மூத்தமகனைக் காண நீதி மன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றத்தின் நீதிபதிக்கு எல்லோரும் தலை வணங்கினார்கள். எழுந்துநின்று மரியாதை செலுத்தினார்கள். பின்பு இரண்டாவது மகனைச் சந்திக்க வந்தார். ஆ·பீஸரின் அறைகது முன் அமர்ந்திருந்தான். ஒவ்வொரு முறையும் ஆபீஸர் உள்ளே போகும் பொழுதும், வெளியே வரும்பொழுதும் இரண்டாவது மகன் எழுந்து நின்று மரியாதை செய்தான். தந்தை இரண்டு பிள்ளைகளையும் பார்த்த பின் கிராமத்துக்குத் திரும்பினார். எந்த மகன் பெற்றோரிடம் பணிவுடன் இருந்தானோ, அவனிடம் மற்றவர் பணிந்து மரியாதை செய்கிறார்கள். யார் தம் பெற்றோரை பணியவில்லையோ அவன் மற்றவர்களுக்கு பணியவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றான் என்பதை கண்டுகொண்டார். நம் பெற்றோரிடம் நாம் காட்டவேண்டிய நன்றி அளவில்லாதது. அவர்களை இறுதிக்காலம்வரை கண்ணுங்கருத்துமாக மனங்கலங்காது மகிழ்ச்சியுடன் பாதுகாக்கவேண்டும். பெற்றோரின் ஆசீர்வாதம் இல்லாதவனுக்கு கடவுளின் கருணைக்கு இடமேயில்லை.





எட்டு நாளாக விண்வெளியில் சுற்றுலாப் பயணியாகத் தங்கியிருந்த தென்னாபிரிக்கக் கோடீஸ்வரர் மார்க் ஷட்டில் வேர்த் தனது சுற்றுலாவை முடித்துக்கொண்டு பாதுகாப்பாக நேற்றுமுன்தினம் 'சோயுஸ்' விண்கலம் மூலம் பூமியில் தரையிறங்கினார்.

விண்வெளி நிலையத்தில் மார்க் தங்கியிருப்பதை மேலேயுள்ள படத்திலும் விண்வெளியிலிருந்து தெரியும் பூமியின் தோற்றத்தை அருகில் உள்ள படத்திலும் காணலாம்.

# நைஜீரியாவில் பயணிகள் விமானம் குடியிருப்பு மீது விழுந்து எரிந்தது!

## அமைச்சர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி!!

லாகோஸ்,மே6

நைஜீரியாவில் பயணிகள் விமானம் ஒன்று நெரிசலான குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கி எரிந்தது. இதில் அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

வடக்கு நைஜீரியாவின் கனோ பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. கனோ விமான நிலையத்திலிருந்து 70 பேருடன் லாகோஸ் நோக்கிப் புறபபட்ட விமானம் மேலெழுந்த சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது.

ஈ.ஏ.எஸ். என்ற தனியார் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான இநத விமானம், கிளம்பியதில் இருந்து வலம், இடமாக அலைந்துகொண்டு சென்று திடீரென்று தலைகீழாக விழுந்ததாகவும் -


விழும்போது இரு மகுதிகள் உட்பட சில கட்டடங்கள் மீது மோதி நொறுங்கி நிலத்தில் வீழ்ந்து தீப்பற்றியதாகவும் -

விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விமானத்திலும், தரையிலும் இருந்த சுமார் 100 பேர்வரை இந்த விபத்தில் இறந்துள்ளதாகவும் நைஜீரிய விளையாட்டுத்துறை அமைச்சரும் இதில் உயிரிழந்ததாகவும் கனோ நிர்வாக அதிகாரி தெரிவித்தார். அமைச்சர் விமானத்தில் பயணித்தாரா? அல்லது குடியிருப்புப் பகுதியில் இருந்தாரா? என்பது குறித்து அவர் விளக்கமளிக்கவில்லை.

விபத்து இடம்பெற்ற இடத்தில் இடிபாடுகளுக்குள் சிக்கிய குடியிருபபாளர்கள் அவலக் குரல் எழுப்பியதாகவும் - சம்பவ இடத்துக்கு வந்த நைஜீரிய தீயணைப்பு வீரர்கள் வாகனத்தில் தீயை அணைப்பதற்கான தண்ணீரோ, பிற உபகரணங்களோ இருக்கவில்லை என்றும் -

இதனால் பலர் காப்பாற்றமுடியாது உயிரிழக்க நேரிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.



நைஜீரியாவில் விமானம் விபத்துக்குள்ளான பகுதி.

நைஜீரியாவில் ஈ.ஏ.எஸ். உட்பட 12க்கும் மேற்பட்ட தனியார் விமான சேவை நிறுவனங்கள் இயங்குகின்றன. அவை பெரும்பாலும் நீண்ட காலம் பயன்படுத்தப்பட்ட பழைய விமானங்களையே சேவையில் ஈடுபடுத்துவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## தீவிரவாதிகளை ஒழிக்கும் சாட்டில்

# நேபாளத்தில் தளம் அமைக்க அமெரிக்கா முயற்சிக்கிறதாம்

## பத்திரிகைகள் குற்றச்சாட்டு

காத்மண்டு,மே6

மாவோயிஸத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு நேபாளத்தில் அமெரிக்கா இராணுவத் தளம் அமைக்க முயற்சிப்பதாக நேபாளப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. தமது நாட்டில் அமெரிக்கா இராணுவத் தளம் அமைப்பதற்கு அவை கடும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளன.

நேபாளத்தில் கம்யூனிஸ அரசை அமைக்க ஆயுதமேந்திப் போராடும் மாவோஸிய தீவிரவாதிகளை அடக்க முடியாது நேபாள அரசு திணறுவதாகவும் -

தீவிரவாதிகளை அடக்குவதற்கு நேபாளத்துக்கு உதவத் தயாராக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளதாகவும் -

இதற்காக நேபாளத்தின் கூர்க்கா மாவட்டத்தில் அமெரிக்கா இராணுவத்தளம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் - பத்திரிகைச் செய்திகளில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேசமயம், அமெரிக்கா இதனை மறுத்துள்ளது. நேபாளத்துக்கான அமெரிக்கத் தூதர் மைக்கேல் மாலினோவ்ஸ்கி, நேபாளத்தில் தளம் அமைக்கும் திட்டம் எதுவும் அமெரிக்காவுக்குக் கிடையாதென்று கூறியுள்ளார்.

இதற்கிடையில், நேபாளப் பிரதமர் ஷேர் பகதூர் தேபா ஒருவார கால விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் அமெரிக்கா சென்றுள்ளார். நேபாளத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகப் பேச்சு நடத்தவே பிரதமர் தேபா அமெரிக்கா சென்றுள்ளதாக நேபாள அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# 'ஈரான்' பத்திரிகைக்குத் தடை!

தெஹ்ரான்,மே6

ஈரானிய அரசின் உத்தியோகபூர்வ செய்திநிறுவனத்தால் வெளியிடப்படும் 'ஈரான்' என்ற பத்திரிகைக்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இருபது ஆண்டுகளின் முன்னர் ஈரானியப் புரட்சி ஏற்பட்டு இஸ்லாமிய அரசு அமைக்கப்பட்டதிலிருந்து ஆண்கள் உள்ள சபையில் பெண் ஒருத்தி பாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் -

கடந்தவாரம் 'ஈரான்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையில் 'இஸ்லாத்தின இறை தூதர் முஹம்மது நபி, பெண்கள் பாடுவதையும், இசை மீட்டுவதையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்' என்று குறிப்பிடப்பட்டிருந்ததே தடைக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

இஸ்லாமிய மதச் சட்டங்களில் சீர்திருத்தங்களை கொண்டு வர ஆர்வம் காட்டும் அதிபர் கதாமியின் அரசின் கீழ் உள்ள பத்திரிகைக்கு அடிப்படை வாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீதிமன்றம் தடை விதித்திருப்பது இதுவே முதல்முறை ஆகும். (ஒ)

## துருக்கித் தலைநகரில்

# சுற்றுலாக் குழுவை பணயம் வைத்த ஆயுததாரி பொலீஸாரிடம் சரண்!

இஸ்தான்புல்,மே6

துருக்கியில் 5 நட்சத்திர தங்கும் விடுதியில் தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகளை பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்த ஆயுததாரி ஒருவர் இறுதியில் பொலீஸாரிடம் சரணடைந்தார்.

கடந்த சனிக்கிழமை காலை தலைநகர் இஸ்தான்புல்லில் உள்ள 'மர்மரா' ஹோட்டலுக்குள் புகுந்த அந்த நபர், தான் வைத்திருந்த துப்பாக்கியால் சில தடவைகள் சுட்டதாகவும் -

பின்னர் அங்கிருந்த 20 சுற்றுலாப் பயணிகளை துப்பாக்கி முனையில் பணயம் வைத்ததாகவும் -

கூறப்படுகிறது.

இது குறித்துத் தகவல் கிடைத்ததும் பொலீஸார் சம்பந்தப்பட்ட ஹோட்டலை சுற்றிவளைத்தனர். அத்துடன் பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸார் ஹோட்டலுக்குள் புகுந்தனர். அவர்களிடம் அந்த நபர் எவ்வித எதிர்ப்புமின்றி தனது ஆயுதத்தை ஒப்படைத்து சரணடைந்து விட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். தான் செச்சினியாவைத் சேர்ந்தவரென்று அந்த நபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதேபோன்று கடந்த வருடம் 13 செச்சினியர்கள் இஸ்தான்புல் நகர விடுதியொன்றுக்குள் புகுந்து சிலரை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த பின்னர் பொலிஸாரிடம் சரணடைந்தனர். செச்சனயா மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் அவ்வாறு நடந்ததாக அவர்கள் பின்னர் தெரிவித்தனர்.

தற்போதைய சம்பவத்திலும், பணயக் கைதிகளாக்கப்பட்டவர்களை எவ்வித தீங்குமின்றி விடுவித்துவிட்டு சம்பந்தப்பட்ட நபர் அமைதியாகச் சரணடைந்ததாகக் கூறப்படுகிறது.

செச்சினியாவில் இருந்து இடம் பெயர்ந்த பெரும் எண்ணிக்கையிலான செச்சினியர்கள் துருக்கியில் தங்கியிருப்பதும் -

செச்சினியா உள்ள பகுதியிலேயே தமது மூதாதையர் வாழ்ந்ததாக பெரும்பாலான துருக்கியர்கள் நம்புவதும் -

குறிப்பிடத்தக்கவை. (ஒ)



துருக்கிய ஹோட்டலில் சுற்றுலாக் குழு பணயம் வைக்கப்பட்ட சமயம் ஹோட்டலில் இருந்து பதற்றத்துடன் வெளியேறும் சிலர்.

# மாணவிகளிடம் சேஷ்டை புரிந்த சிங்கப்பூர் ஆசிரியர் பிடிபட்டார்

சிங்கப்பூர்,மே6

மாணவிகளை தத்ரூபமான ஓவியமாக வரைந்து தருவதாகக் கூறித் தனது வக்கிர ஆசைகளை தணித்த ஆசிரியர் ஒருவரை சிங்கப்பூர் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

சிங்கப்பூரில் மலாய் மொழி கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகப் பணியாற்றியவர் சையத் ஷைனுதீன் (வயது 33). நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான இவர் தனது மாணவிகள் சிலரிடம் தன்னால் ஒருவரைப் பார்த்து அப்படியே ஓவியமாக வரைய முடியும் என்று கூறியுள்ளார். அத்துடன் 14 - 16 வயதுக்குட்பட்ட மாணவிகள் ஆறு பேரை 'மொடலிங்' ஓவியம் வரைவதற்காக ஒப்பந்தமும் செய்தார். அதற்காக அவர்களுக்கு தலா 90 சிங்கப்பூர் டொலர்கள சம்பளமாகத் தருவதாகவும் கூறினார்.

இதனை நம்பிய மாணவிகளை தனது இருப்பிடத்தில் வைத்து ஓவியம் வரைவதாகக் கூறி அவர்களது மேலாடையைக் களைந்து ஷைனுதீன், பாலியல் துஷ்பிரயோகம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர் ஓவியம் வரையவோ, பணம் கொடுக்கவோ இல்லை.

இது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்தே ஷைனுதீன் கைது செய்யப்பட்டார். (ஒ)

# கொலம்பியத் தேவாலயத்தில் குண்டுவெடித்து 63 பேர் பலி!

பகோடா,மே6

கொலம்பியாவில் தீவிரவாதக் குழு, தேவாலயம் ஒன்றில் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் அங்கு தஞ்சமடைந்திருந்த 60 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் 100 பேர்வரை காயமடைந்தனர்.

கொலம்பிய அரசுக்கெதிராக புரட்சிகர ஆயுதப் படை மற்றும் பராமிலி இடதுசாரிக் குழு ஆகியவை போராடிவருகின்றன. தீவிரவாதக் குழுக்களான இந்த இரு அமைப்புகளும் கொள்கை முரண்பாடு காரணமாகக் கடந்த சில நாள்களாக தமக்குள் தீவிர மோதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் சோகோ மாகாணத்தின் போஜயா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரு தீவிரவாத அமைப்புகளுக்கிடையேயான மோதலில் உயிர்தப்ப அப்பகுதி மக்கள் அங்கிருந்த கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் தஞ்சமடைந்திருந்தனர். அப்போது தேவாலயத்துக்குள் குண்டு வெடித்ததிலேயே உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இரு தீவிரவாத அமைப்புகளும் ஒன்றை மற்றொன்று குற்றஞ்சாட்டியுள்ளன. வெடித்த குண்டு எரிவாயு 'சிலிண்டர்' ஒன்றுடன் இணைத்து வைக்கப்பட்டிருந்ததால், தேவாலயம் தகர்ந்து விழும் அளவுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் இரு தீவிரவாதக் குழுக்களும் நேரடி மோதலில் ஈடுபட்டதால் மீட்புப் பணியும், முதலுதவிச் சிகிச்சையும் உடனடியாக மேற்கொள்ளப்பட முடியாது போனதாகக் கூறப்படுகிறது.

கொலம்பியாவின் உள்நாட்டுப் போரில் கடந்த 10ஆண்டுகளில் மட்டும் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் ஆவர். (ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

சங்கானைப் பொதுச் சந்தையில் தவறவிடப்பட்ட மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டிக் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். பொதுச் சந்தை முகாமையாளர் இராஜேந்திரம் விஜியன், பிரதான வீதி, சங்கானை. (3475)

### தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அல்லது திருநெல்வேலிப் பகுதியில் நீர், மின்சாரம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல. 1508, C/o உதயன், யாழ்ப்பாணம். (3468)

பாவித்த பழைய தையல் மெசின்கள் தேவை. நியாயமான விலைக்கு எடுக்கப்படும். தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (3390)

### கல்வி

கட்டாய பாடமாகிய O/L கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடையக் கற்பிக்கப்படும். காலை 8.00 - 9.00 மணிக்குள் சந்திக்கவும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (3430)

### விற்பனைக்கு

நல்லின டோமன் பின்சர் (DOBERMAN PINSCHER) 11/2 மாத ஆண, பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3425)

கிறேசருக்குப் பாவிக்கக்கூடிய BLACK STONE எஞ்சினும், 17.5kw (3Phase) டைனமோவுடன் கூடிய Lister எஞ்சினும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: ஜீ.தீஸ், காளிகோயிலடி, திருநெல்வேலி. (3480)

### வீடு விற்பனைக்கு

கல்வியங்காட்டில் 31/4 பரப்புக் காணி பெரிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜேஸ்வரி ஏரம்பு, முருகேசர் வளவு, முத்துமாரி அம்பாள் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (3442)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்லின, பூச்சி நீக்கப்பட்ட (DASH HOUND) டாஸ்கவுண்ட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3447)

### தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா கிருபாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (780543590V), விசேட அடையாள அட்டை (091037516) என்பன 24.04.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புத்தூர் அம்பாள் புடைவையகம், புத்தூர் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3490)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே6

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த முத்திரைகள் நேற்று முன்தினம் வந்து சேர்ந்தன. இவை இன்று தொடக்கம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்று யாழ். சிரேஷ்ட தபாலதிபர் அறிவித்துள்ளார். (உ)

## புகையிலைச் செய்கை பெரிதும் பாதிப்பு

அரியாலை,மே6

நீர்வேலி, கோப்பாய் பகுதியில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட புகையிலைச் செய்கை இம்முறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையினால புகையிலை பயிரில் ஒருவித தொற்று நோய்த் தாக்கம் ஏற்பட்டதாலேயே புகையிலைச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட புகையிலைக் கன்றுகளை விவசாயிகள் அழித்து மாற்றுப் பயிர்களை மேற்கொள்ளும் பொருட்டு தோட்டங்களை சீர்செய்துவருவதையும் காண முடிந்தது. (க-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 1930 - 03 - 12



கண் நெகிழ 2002 - 04 - 06

### திருமதி கந்தசாமி சின்னாச்சி

(அராலி வீதி, சங்கானை)

*அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்*
*காலமெல்லாம் எமக்காகக் கற்பூரமாய்*
*உங்களைக் கரைத்த எம் தெய்வமே!*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும் 'அம்மா'*
*என்று ஆசையுடன் நாம் அழைத்து மகிழ*
*நீங்கள் இல்லையே!*


அன்னாரது பிரிவால் துயருற்றிருந்தவேளையில் ஆறுதல்கூறி, ஒத்துழைப்புகள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் - *இன்று (06.05.2002) திங்கட்கிழமை* அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
*க.கருணாநிதி (கருணா - மகன்)*
*அராலி வீதி, சங்கானை.* (3488)

**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 04 - 1939



மறைவு 29 - 04 - 2000

### அமரர் பொன்னம்பலம் ஜெயபத்மசிங்கம்

(ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்)

திதி: 06.05.2002

***நீங்காது உமதுருவம் நித்தமும் தாக்குதப்பா!***
***ஈராண்டு சென்றதோ இவ்வுலகை மறந்து***
***ஈர் எட்டுப் பதினாறு ஆண்டு சென்றாலும் - நீங்கள்***
***காட்டிய வழியில் நின்று.***

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்!

*கொம்மந்தறை,*
*வல்வெட்டித்துறை.* (3470)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## மீளாக் கண்ணீர்த் துளிகள்

**எமது சக மாணவியின் தந்தையார்**

### அமரர் த.குமாரசாமி (J.P.)

**அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்குரிய அனுதாபத் துளிகள்.**

*கால மகளோ கண்ணீர்த்துளிகள் சொரிகின்றாளே,*
*ஞால மகளோ அன்னாரின் பிரிவினிலே சோகமழை சொரிகின்றாளே,*
*தேவ மகளோ தணியாத தாகத்துளிகள் சொரிகின்றாளே,*
*சிவா கல்வி நிலைய சக மாணவர்களோ*
*ஆழ்ந்த சோகக் கண்ணீர்த்துளிகள் சொரிகின்றனரே!*
*பரந்தாமன் பதம் நாடி பறந்தனையோ ஐயா!*

இவ்வண்ணம்:
**புலவர் சிவா கல்வி நிலைய ஆசிரியரும், சகமாணவரும்**
(தரம் பத்து மாணவர்கள்)

*கோணாவளை லேன்,*
*கொக்குவில்.* (3489)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயமலர் திருநாவுக்கரசு

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நாவலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமலர் திருநாவுக்கரசு அவர்கள் (04.05.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (08.05.2002) புதன்கிழமை நாவலப்பிட்டியில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பி.வரதராஜன்,**
தேசிய சேமிப்பு வங்கி,
பருத்தித்துறை.

*60, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (3487)

## கல்விச்சாலைக் காட்சிகள்




சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் உரையாற்றுகின்றார். அருகில் பிரதமவிருந்தினரான யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கே.கணேசநாதன், சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா மற்றும் கோட்டப் பாடசாலை அதிபர்கள் படத்தில் காணப்படுகின்றனர். (எ-29)



மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயமும், மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளின் இடைவேளை நிகழ்வில் இடம்பெற்ற உடற்பயிற்சிக் கண்காட்சியின் ஒருபகுதியை படத்தில் காணலாம். (எ-8)



கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பாடசாலை ஆசிரியர் ஒருவரால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் சிறப்பு விருந்தினரான கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர், வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-182)



கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டி நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் இ.அருணாசலம், உபஅதிபர் ம.குலசிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-72)

# 60ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 28 - 03 - 1933

மறைவு 09 - 03 - 2002

வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த

### அமரர் நாகமுத்து தம்பு கந்தசாமி

அன்புடன் வாழ்ந்து அகிலத்தை விட்டுப் பிரிந்தீர்
ஆறாத சோகத்தில் நாம் ஆழ்ந்தே தவிக்கின்றோம்
பண்புடன் உம்மை நினைவு கூர்ந்து இங்கு
பாசத்தால் கட்டுண்டு பரிதவிக்கின்றோம்!

ஆத்மா சாந்தி பெறுக!

நாளை (07.05.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.சுந்தரவேல்
க.கோவிந்தராசா
க.சத்தியநாதன்

*வாதரவத்தை,*
*புத்தூர்.* (3465)

# ஓராண்டு நினைவலைகள்



மெய்யுடன் 07 - 03 - 1920

இறையுடன் 18 - 04 - 2001

### அமரர் நாகலிங்கம் பொன்னம்பலம்

(முன்னாள் 'லேக் ஹவுஸ்' பத்திரிகை முகவர்)

திதி:06.05.2002

பார் போற்ற நீர் வாழ்ந்து பண்பான மொழிபேசி
ஏர் போல நீர் மாறி கண்போ லெமைக் காத்து
கார் கால மயிலாக கணப்பொழுதும் நாம் வாழ
சீர் செய்த சீமான் நீர் போய் ஈராறு திங்களானதே!

*பொறை சேர் ஐய, நின் ஆன்மா*
*சதுவையூர்ப் புவனேஸ்வரி தாள் சேர*
*நிறைவாக ஏற்றி இறைஞ்சுகின்றோம்!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*'கேணிக்கரை',*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (3462)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28 - 03 - 1962

உதிர்வு 06 - 04 - 2002

### திருமதி புலேந்திரன் அன்னலக்ஷ்மி

அன்பின் இலக்கனமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்து காட்டிய அன்புச் சிகரமே!
தாயிழந்த கன்றுகள் போல்
உன் மழலைச் செல்வங்கள் கதறிட
உன்னைப் பிரிந்த துயரத்தில்
உடன் பிறப்புகள் கதறிட
காலன் தன் கொடிய பசிக்கு
இரையாக உன்னையே
பாதியிலே எடுத்துக்கொண்டதை
நினைத்து தினமும் கண்ணீர் சிந்துகின்றோம்
மீண்டும் நீர் இப்பூமியிலே
பிறந்து வர மாட்டாயோ?

*ஆண்டார் வளவு,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.* (3432)

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
*சுவர்ணா (பேரமகள்)*

## முக்கிய கலந்துரையாடல்

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருக்கும் திரையரங்குகள், சிறு திரையரங்குகள், ஒலி, ஒளி பதிவுக் கூடங்கள், ஒலி, ஒளி நாடா விநியோகஸ்தர்கள், படப்பிடிப்பாளர்கள் ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உரிமையாளர்கள், நடத்துநர்கள் ஆகியோரைத் தவறாது இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ம)

## ஏ-15 வீதி விரைவில் திறப்பு

ஏ-15 என அழைக்கப்படும் திருகோணமலை - மட்டக்களப்புக்கான பாதை புனரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு விடப்படவுள்ளது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபனுடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வள பிரதியமைச்சர் முகைதீன் அப்துல் காதர் நடத்திய பேச்சு வார்த்தையின்போது இது பற்றி இணக்கம் காணப்பட்டது.

திருகோணமலையில் இருந்து கிண்ணியா, மூதூர், கிளிவெட்டி, வெருகல் வாழைச்சேனை ஊடாக மட்டக்களப்பு செல்லன் வீதி தற்பொழுது போக்குவரத்து செய்ய முடியாத நிலை இருக்கிறது. (ம)

## அரசியல் கருத்தரங்குகள்

சமகால அரசியல் நிலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

இத்தகைய கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் மூளாய் பிரசாத் மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. முன்னாள் உதவி அரசாங்க அதிபர் க. சந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான பாப்பா, மதி ஆகியோர் சமகால அரசியல் நிலை குறித்து விளக்கினர்.

அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் இந்தகைய மற்றொரு கருத்தரங்கு பாஷையூர் சென்அன்ரனீஸ் பாடசாலையில் நடைபெற்றது. புலிகளின் மகளிர் அணிப் பிரமுகர் தமிழ்விழி இக்கருத்தரங்கில் சமகால அரசியல் குறித்து விளக்கமளித்தார். (ம)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



மாவிட்டபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த

### அமரர் முருகன் வேலாயுதம்

மலர்வு 1941.02.15

உதிர்வு 2002.03.23

பாசத்தின் பிறப்பிடமே!
நாள்கள் நாற்பத்தைந்து உருண்டோடினும்
எம் கண்ணீரோ வற்றாது
இவ்வுலகம் உள்ளவரை உம் நினைவில்
வாழ்ந்திடுவோம்.

*ஆத்மா சாந்திபெறுவதாக!*

*கடந்த 23.03.2002 அன்று நடந்த அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (06.05.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தற்போதைய முகவரி:
*சுதுமலை மத்தி, தாவடி வீதி,*
*மானிப்பாய்.* (3455)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நான்காவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 08 - 07 - 1947

மறைவு 21 - 04 - 1998

### அமரர் கதிரவேலு கந்தையா

(இரத்தினம் மெக்கானிக்)

திதி:06.05.2002

அறிவு வழிகாட்டி எம்மை அன்புடனே
அவனியிலே உயரவைத்தீர்!
அன்புவழிகாட்டி எம்மை ஆதரித்து
அரவணைத்து வளர்த்தெடுத்தீர்!
பண்பு வழியதனில் நீங்கள் என்றும்
பாங்குடனே நடந்தீர்கள்! வன்புவழி எதுவென்று
வாழ்வினிலே அறிந்திடாத அன்புருவே!
அப்பாவே ஆருயிர்த் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு ஆனபோதும் ஆறவில்லை
எம்துயர் அஞ்சலிகள் செய்கின்றோம்
அரனடிக்கீழ் இன்புறவே!

*அச்சுவேலி தெற்கு* (3460)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

# நீங்கா நினைவலைகள்





### அமரர் முத்தையா வல்லிபுரம் அமரர் வல்லிபுரம் சிவசோதி

*(ஸ்தாபகர், திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி) (உரிமையாளர், திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி)*

12.04.1919 ← தோற்றம் → 18.05.1943

08.05.1991 ← மறைவு → 13.06.1989

திதி: 06.05.2002

அன்பாலும் பண்பாலும் எம் அனைவரையும் அரவணைத்து அறிவூட்டி ஆதரவுடன் காத்த எம் அன்புத் தெய்வங்களே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் உயிர் உள்ளவரை என்றென்றும் உங்கள் இருவரையும் பிரிந்தும் பிரியாத மறைந்தும் மறையாத உங்களின் நினைவுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*திருமகள் சோதி வீதி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

என்றும் உங்கள் நினைவில் துயரோடு வாழும்:
குடும்பத்தினர்.

(3310)

### பச்சிலைப்பள்ளியில் மீளக்குடியமர்வு:

# வடமராட்சியில் இருந்து கண்ணீருடன் விடைபெற்றுச் செல்லும் குடும்பங்கள்!

தென்மராட்சி,மே6

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளான மாசார், சோரன் பற்று, புதுக்காடு, தர்மக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடிய மர்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியிருந்த இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தாங்கள் தங்கியிருந்த பகுதி மக்களிடம் கண்ணீருடன் விடைபெற்று வாகனங்களில் பொருள்களை ஏற்றிக்கொண்டு குடும்பம் குடும்பமாகச் செல்வதைக் காண முடிகிறது.

இதேவேளை, பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளான இத்தாவில், முகமாலை, இந்திராபுரம், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்க[illegible]ல் மிதிவெடி அபாய அச்சுறுத்தல்[illegible]ளதால் மீளக்குடியமர முடியாத நிலை நீடிக்கிறது.

(க-117)

### சேருவில விகாரையின் பிரதம குரு

# இடைக்கால நிர்வாக அறிவிப்புக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு,மே6

ஒரு தனி நிர்வாக அலகின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்தைக் கொண்டுவரும் திட்டத்தை எதிர்த்து சேருவில ரஜமகா விகாரைப் பிரதம குரு சங்கைக்குரிய சேருவில சரண கிர்த்தி தேரரும் மற்றும் ஒன்பது பேரும் இணைந்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் அண்மையில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில், அதன் தலைவர் பிரபாகரன் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கும் திட்டம் பற்றி பிரஸ் தாபித்திருந்தார். அப்படியானதொரு நடவடிக்கை கிழக்குப் பகுதி மக்களுக்குக் கெடுதலானது ஆகும். மாகாண சபைச் சட்ட விதிகளின்படி இப்படியானதொரு மாற்றம் கருத்துக் கணிப்பின்மூலமே செயயப்படவேண்டும்.

இதைவிட அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி பொது மக்களுக்கு எந்தவித நம்பிக்கையும் கிடையாது.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும்வரை இத்தகைய ஓர் இடைக்கால நிர்வாகம் அமைக்கும் திட்டத்தை தடுத்துவைக்க வேண்டும் என்று அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர் மனுதாரர்களாக சட்டமா அதிபர், உள்ளூராட்சி அமைச்சர், உள்ளூராட்சி அமைச்சரின் செயலர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். (க)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமண வாழ்வில் 40 ஆண்டு பூர்த்தியையும்,
இசை நாடகத்துறையில் 'பண்ணிசைச் செல்வர்',
'முத்தமிழ் வித்தகர்', 'கலை மகிழ்நன்', 'இசை நாடகமாமணி',
'கலைவாருதி', 'இயலிசை நாடகச் செல்வர்', 'கலாபூஷணம்'
ஆகிய பெருமைமிக்க பட்டங்களையும் பெற்று,
60 ஆண்டு பூர்த்தியையும் காணும் அரியாலையூர் தந்த
பேராசானும் பொலிகண்டியைப் புகுந்த இடமாகவும் கொண்ட
கலாபூஷணம்

## திரு.வே.க.பாலசிங்கம்

ஆசிரியர் அவர்களையும்
மனைவியார்

## திருமதி பவளம் பாலசிங்கம்

ஆசிரியை அவர்களையும்
மேன்மேலும் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*34/1, கலைமகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (3495)

சகோதரர், மைத்துனர், மக்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
இசை நாடக அபிமானிகள்.


# கண்ணீர் அஞ்சலி

## தம்பிஐயா குமாரசாமி J.P.

(வேலணை கிழக்கு)

எங்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் - பாடசாலை மேம்பாட்டுக்காக அயராது உழைத்தவரும் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசித்த சமூகத் தொண்டருமான

### த.குமாரசாமி

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் ஆன்மா சாந்தியடைய வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனை இறைஞ்சுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்,
**வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்**

(3500)

## தென்மராட்சிக்கு முகமாலையூடாக மீன் வருகிறது

தென்மராட்சி,மே6

வடமராட்சி கிழக்கு கடல் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் முகமாலை ஊடாக முன்னரைப் போன்று தென்மராட்சிப் பகுதி சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை போன்ற இடங்களில் பிடிக்கப்படும் மீன்கள் சைக்கிள்களில் கண்டி வீதி வழியாகக் கொண்டு வரப்படுவதைக் காணமுடிகிறது.

இதனால் தென்மராட்சிப் பகுதி சந்தைகளில் மீனின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. (க-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றுவரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

☆ ஓல்ட் கோல்ட்ஸ் எதிர் செவன் ஸ்ரார் அணி

☆ யாழ்.பல்கலை (கோல்ட்ஸ்) அணி எதிர் உடற்கலவி (சிவப்பு) அணி.

இவற்றில் வெற்றிபெறும் அணிகள் நாளை செவ்வாய் நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்குகொள்ளும். (க-5)

☆ ☆ ☆

வலி.வடக்கு,மே6

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

☆ மருதங்கேணி பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

☆ யாழ்.பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி. (க-86)

## இந்து ஆலய விவரம் சேகரிப்பு

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் உள்ள இந்து ஆலயங்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

ஆலயங்கள் பற்றிய விவரங்களை தாமதமின்றி கரவெட்டி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.(க-173)

## வல்வையில் நாளை நாய்களுக்கு தடுப்பூசி

வடமராட்சி,மே6

வல்வெட்டித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

அன்றையதினம் நெடியகாடு கணபதி படிப்பகத்தில் காலை 9 மணி முதல் 11மணி வரையும், வல்வெட்டித்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.15 மணிமுதல பிற்பகல் 1மணிவரையும் கெருடாவில் தெற்கு சனசமூக நிலையத்தல் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரையும் நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-173)

## சந்தைகளில் நேற்று மீன் விலை வீழ்ச்சி

குடாநாட்டில் நேற்று சந்தைகளில் மீனின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றின் காரணமாக நேற்று சந்தையில் மீன் குவிந்து கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, கடந்த சில தினங்களாகவே மீன் விலையில் பெரிதும் சரிவு ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-17)

## எறிபந்து பயிற்சி முகாம்

எறிபந்து தொடர்பான பயிற்சி முகாம் திட்டமிட்டபடி நாளையும், நாளை மறுதினமும் யாழ்.துரையபபா ஸ்ரேடியத்தில் காலை 8 மணி முதல் நடைபெறும் என யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (எ)


## தொண்டர் ஆசிரியர் சங்கம், யாழ்.மாவட்டம்
### பதிவுகளை உறுதிப்படுத்தல்

சகல தொண்டர் ஆசிரியர்களும் இன்று (06.05.2002) திங்கட்கிழமை மறியற்போராட்டம் நடைபெறும் இடத்தில் தமது பெயர்களைத் தவறாது பதிவுசெய்து உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

இவ்வருட சந்தாப்பணத்தையும் செலுத்தவும்.

தலைவர் செயலாளர்

**தொண்டர் ஆசிரியர் சங்கம்,**
**யாழ்.மாவட்டம்.**

(3492)

## நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலகர்களின் பணிவான வேண்டுகோள்

விநாயக அடியார்களே!

ஆலயத் திருப்பணிக்கு நிதி உதவ விரும்புபவர்கள் கீழ்க் காணும் முகவரியாளரிடம் மட்டும் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**திரு.ந.கந்தவனம்** *பொருளாளர்*
**திரு.த.யோகானந்தன்** *செயலாளர்*

★ அடியார்கள் வேறு யாரிடமும் பணஞ்செலுத்த வேண்டாம். மேற்கூறப்பட்ட முகவரியாளர் தவிர மற்ற நபர்களிடம் கொடுக்கும் பணம் திருப்பணி நிதியில் சேரமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் சார்பாக
பிரம்மஸ்ரீ [illegible]பிரமணிய சர்மா,
ஆலய பரிபாலகர்கள்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (3494)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா கணேசுப்பத்தர்

நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா கணேசுப்பத்தர் 04.05.2002 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - மங்களம் தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற அரசடி வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற கணேசுப்பத்தரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாராயணசாமி, ஜெகநாதன் ஆகியோரின் சகோதரியும் விக்கினேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி (மன்னார்), கதிர்காமத்தம்பி (அப்பன்), கருணாகரன் (ரவி), லிங்கேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராஜா, வல்லிபுரம், செல்லத்தம்பு, மகாதேவி, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயந்தினி, திருமதி பிரகாசினி காந்தரூபன், ஜெயப்பிரதா, பிரசாந்த், ஜெயசாந்த், சுரேந்திரன், ராஜ்குமார், சகிதா, சங்கீதா, எழில் செல்வன், மேரி றெஜியன், மேரி பிரியன், டோறா, கணேசாந்த், கோகுல் ராஜ், விக்னேசன், மேனகா ஆகியோரின் பேர்த்தியும் ஸ்னேகாவின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னம்மா செல்வநாயகம், திருமதி பவளரத்தினம் சுப்பிரமணியம், மிருதங்க வித்துவான் அம்பலவாணர், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அப்பன் ஆட்ஸ்",*
*576, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (3496)

தகவல்:
க.கதிர்காமத்தம்பி
(அப்பன் - மகன்)

## திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை

சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை அவர்கள் 04.05.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.05.2002) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.* (3501)

தகவல்:
க.சதாசிவம்
(மகன்)

## தம்பிஐயா குமாரசாமி J.P.

வேலணை கிழக்கைச் சேர்ந்தவரும் கொக்குவில் கிழக்கு மருத்துவ பீட முகரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பிஐயா குமாரசாமி J.P. அவர்கள் 04-05-2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிஐயா - செல்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சோதிமலரின் அன்புக் கணவரும் அனித்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையாரும் புவனேஸ்வரி, தருமபாலன், இராஜேஸ்வரி, சந்திரசேகரன் (சுவிஸ்), தில்லை நடராசா (பிரான்ஸ்), சிவபாலன் (லண்டன்), சிவகுமார் (கனடா), சிவனேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் திருமதி குணரெத்தினம் சிவபாக்கியம், திருமதி தவமணி தணிகாசலம், தேவராசா (சுவிஸ்), பரமானந்தம் (ஜேர்மனி), திருமதி தவேந்திரா மங்கையர்க்கரசி (ஜேர்மனி), திருமதி யோகராசா பத்மராணி, திருமதி மகேஸ்வரன் தேவநாயகி (ஜேர்மனி), திருமதி இரத்தினசபாபதி மனோகரி, தயாபரன் (லண்டன்), நிசாகரன் (பிறவுண்சன் கொம்பனி), ஆனந்தராசா (சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), ஞானகணேஸ்வரி, மதிவதனி, வானதி, சசிகலா, யசோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற குணரெத்தினம், தணிகாசலம் (தாயகம் ஆசிரியர்), தவேந்திரா, யோகராசா, மகேஸ்வரன், இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகலனும் சாந்தினி, கீதாராணி, சிவதர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-2002) திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருத்துவபீட முகரி,*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (3502)

தகவல்:
திருமதி கு.சோதிமலர் (மனைவி)
க.நிசாகரன் (மைத்துனர்)

# கிராம சேவையாளர்களுக்கு செவ்வாயன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே6

சகல கிராம சேவையாளர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை இரு அமர்வுகளாக யாழ். செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்களுக்கு அன்று முற்பகல் 10 மணிக்கும் -

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி, கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்களுக்கு அன்று பிற்பகல் 2 மணிக்கும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன என்று மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

நிர்வாக விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சகல கிராம சேவையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அவர் கேட்டுள்ளார்.

கலந்துரையாடலுக்கு வரும்போது, தத்தம் பகுதிகளில் படையினர் நிலை கொண்டுள்ள வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், வீடுகள் ஆகியன தொடர்பான விவரங்களைக் கொண்டு வரும்படி சகல கிராம சேவையாளர்களையும் அவர் கோரியுள்ளார்.

# சமுர்த்தி அலுவலர்களுக்கு கலந்துரையாடல்

சகல சமுர்த்தி அலுவலர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். செயலக கேட்போர்கூடத்தில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு முற்பகல் 10மணிக்கும் -

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கும் - கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

சகல சமுர்த்தி அலுவலர்களையும் தவறாது சமுகம் அளிக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

## சமய சந்நிதி

சுதுமலை,மே6

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிறது.

தொடர்ந்து 18 தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன. உற்சவ காலத்தில் இரா.செல்வவடிவேலின் மகாபாரதத் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

(க-139)

# தமிழகம் திருநெல்வேலியில் 3 இலங்கை அகதிகள் கைது

சென்னை,மே6

திருநெல்வேலி பெற்றோல் நிலையங்களில் நடந்த முகமூடிக் கொள்ளைகள் தொடர்பாக இலங்கை அகதிகள் முகாமைச்சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரண்டு பெற்றோல் நிலையங்களில் கொள்ளைச் சம்பவங்கள் நடந்தன.

பொன்னாக்குடி பெற்றோல் நிலையத்தில் நடந்த கொள்ளையின்போது முகமூடி அணிந்துவந்த கும்பல் அங்கிருந்த ஊழியரைத் தாக்கி இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றது.

இந்தச் சம்பவம் நடந்து சில தினங்களுக்குப் பின் கங்கைகொண்டான் அருகே உள்ள பெற்றோல் நிலையத்திலும் ஒரு கொள்ளைச் சம்பவம் நடந்தது. முகமூடிக் கும்பல் துப்பாக்கி, வெடிகுண்டுகளைக் காட்டி மிரட்டியுள்ளது. ஆனால் ஊழியர்கள் அவர்களில் ஒருவனைப் பிடித்தபோது அவர்களிடம் இருந்த துப்பாக்கியும் வெடிகுண்டுகளும் போலியானவை எனத் தெரியவந்தது.

பொலீஸார் விசாரணைசெய்து நெல்லை மாவட்டம் தாழையூத்து அருகில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த அஜீத்குமார் (24), ஜெகதீபன் (24), சதீஷ்குமார் (22) ஆகிய மூவரைக் கைது செய்தனர்.

# தோல்வியுற்ற ஐ.தே.கட்சி எம்.பிக்கள் 12 பேருக்கு ஆலோசகர் பதவிகள்!

கொழும்பு,மே6

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் ஐ.தே.க. எம்.பிக்கள் 12 பேருக்கு அமைச்சுக்களில் ஆலோசகர் பதவிகள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக ஆலோசனை ஒன்றை அரசு தெரிவித்திருக்கிறது என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள்மூலம் அறியப்படுகின்றது.

பதவிகள் வழங்கப்படவிருக்கும் முன்னாள் எம்.பிக்களும் அமைச்சுகளும் வருமாறு:-

எதிரிவீர பிரேமரத்ன - விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சு, அலிசாஹிர் மௌலானா, எம்.விஜயரத்ன, கொள்கை திட்டமிடல் அமைச்சு, ஆர்.எம்.தர்மதாஸ பண்டா, நிஹால் பக்மீவெவ - உள்நாட்டு மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சு, ஆர்.எம்.ரத்னாயக்கா - மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அமைச்சு, சரத் குணவர்த்தன - சுகாதார சமூக சேமநல அமைச்சு, சந்திரதாச கலப்பத்தி - நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சு, சாந்தபுஞ்சி ஹேவா - போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சு, சம்ஸன் சில்வா - உல்லாசப் பயணத்துறை அமைச்சு, பந்துல பராக்கிரம குணவர்தன - மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, அபதுல்மஜிது - இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு.

இவர்களுக்கான மாதச் சம்பளம் இருபதாயிரம் ரூபா. உத்தியோகபூர்வ வாகன எரிபொருள் செலவும் வழங்கப்படும்.

அடுத்த இருவாரங்களில் அந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்

கோண்டாவில்,மே6

கொழும்பு, தெஹிவளை, போதிருக்காராமய வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி நூதன ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

ஸ்ரீ விநாயகர், சீதாலட்சுமண சமேத ஸ்ரீராமர், ஸ்ரீதன்வந்திரி ஸ்ரீமாரி அம்பாள், ஸ்ரீ பாலசுப்பிரமணியர், நவக்ரகதேவர்கள் ஸ்ரீ பைரவர் உட்பட ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமிக்கு சாந்தீக மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேகம் தொடர்பான கிரியைகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

(ரி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியமுத்து பூவிலிங்கம்

*(இளைப்பாறிய உப அதிபர், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி., ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா மகா வித்தி. யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/முத்துத்தம்பி மகா வித்தி.)*

அன்னாரின் நல்லடக்கம் தவிர்க்கமுடியாத காரணத்தால் நேற்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவில்லை. இவரது நல்லடக்கம் நாளை (07.05.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

*இல.85, தேவாலய வீதி,*
*யாழ்ப்பாணம். (சப்பல் வீதி)* (3505)

தகவல்:
**பிள்ளைகள்.**

## முருகேசு கந்தையா

**(இளைப்பாறிய சங்கானை ப.நோ.கூ.ச. முகாமையாளர்)**

சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு கந்தையா நேற்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - கைராசிப்பிள்ளையின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற இளையதம்பி (மலேசியா பெஞ்சனியர்) மற்றும் அரியநாயகியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வராணி, புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராசநாயகம், மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் இராஜ்குமார், விவேகானந்தன் அவர்களின் சகலனும் ஜெயகௌரியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் வடக்கு,*
*சுழிபுரம்.* (C/22035)

தகவல்:
**பொன்னுத்துரை.**

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 04 - 08 - 1953



ஆண்டவன் அடியில் 04 - 05 - 2002

## தம்பிஐயா குமாரசாமி J.P.

**அவர்கள் 04.05.2002 சனிக்கிழமை இறைபதம் அடைந்தமையையிட்டு அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம். பிரிவுத் துயரால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**177/3, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (3504)

**மதனா ஜுவல்லறி**


நீங்கள் **A/L-2002** பரீட்சை எடுத்துவிட்டீர்களா ? ...

கணனித்துறையில் நீங்கள் ஓர் வல்லுநராக......... **IIS** உடன் இணைந்து கொள்ளுங்கள்

# கணனிக் கற்கை நெறிகள்

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 19/05/2002 ஞாயிறு காலை 10.00 மணி**

| Courses | Duration (Month) |
|---|---|
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 5 |
| Diploma in Visual Basic Programming | 5 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Diploma in Computer Programming | 8 |
| Diploma in Personal Computer Specialist | 9 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |



- ✓ பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
- ✓ தகுதி, அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.
- ✓ நவீன கணனித் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய ஆய்வுகூடம்.
- ✓ Multimedia Projector வசதி கொண்ட விரிவுரை மண்டபங்கள்.
- ✓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த, விண்ணப்பிக்கத் தவறிய அனைத்து மாணவர்களுக்குமென ஆரம்பிக்கப்படும் பயிற்சி நெறிகள்
- ✓ பல்வேறு வகையில் கட்டணச் சலுகைகள்

IIS Jaffna, Sri Lanka
INSTITUTE OF INFORMATICS STUDIES

I I S

# Institute of Informatics Studies

Head Office:
100, Clock Tower Road, Jaffna.
021-2831 Email : iis@sltnet.lk

Branches:
Nelliyady Karaveddy.
Main Street, Chankanai.



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த், மீனா, மனோரமா, மணிவண்ணன் நடித்த

**பெரியண்ணா**

தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பி.ப.)

(C-21981)



**நாகம்ஸ்** சுன்னாகம்

ரொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த

**தமிழ்** (சீலஸ்)

காட்சிகள்:11.00,3.00 (பு.நே.)

8ஆம் திகதி முதல் கன்னுபடப்போகுதையா

(3472)



**ராஜா** யாழ்ப்பாணம்

4ஆவது ஜனத்திரள் வாரம்

இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக நடிக்க

**தமிழன்**

காட்சிகள்: 10.30, 2.30, 5.30

(C/21980)

# யாழ். ரயில் பாதையை புனரமைக்க ரூ.280 கோடி தேவை என மதிப்பீடு

யாழ்ப்பாணத்துக்கான ரயில் பாதையைப் புனரமைக்க 280 கோடி ரூபா செலவாகும் என்று ரயில்வே திணைக்களம் மதிப்பிட்டிருக்கின்றது.

வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையிலான இந்த ரயில் பாதை 161கிலோ மீற்றர் நீளமானதாகும். அதனைப் புனரமைக்க இரண்டு ஆண்டுகள் செல்லும் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

ரயில் பாதை, ரயில் நிலையங்கள், சமிக்ஞைகள், ரயில்வே விடுதிகள் ஆகிய அனைத்தும் மீண்டும் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன என்றும் மதிப்பீடுகள் யாவும் புனரமைப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

# கண்காணிப்புக் குழுவுக்கு மேலும் 25 உறுப்பினர்கள்

கொழும்பு,மே6

யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு மேலும் 25 கண்காணிப்பாளர்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரவிருக்கின்றனர் என்று செய்தியொன்று தெரிவிக்கின்றது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் இவர்கள், விரைவில் இலங்கை வரவிருக்கின்றனர் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன என்று அச்செய்தி மேலும் கூறுகிறது.

தற்பொழுது கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் வெளிநாட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்று கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.(-3)

# இளைஞர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,மே6

அரியாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றிரவு 7மணியளவில் நாயன்மார்கட்டில் வைத்து இனந்தெரியாத குழு ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

சொந்த வேலையாகச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த செல்வரத்தினம் பார்த்தீபன் (வயது 19) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகிக் காயம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்கியவர்கள் யார்? எதற்காகத் தாக்கினார்கள்? என்ற விவரங்கள் தெரியவரவில்லை. (உ-12)

# ஐ.நா.மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் ஏனைய நாட்டுத் தலைவர்கள் யார் என்பது திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்யப்பட்டது. அந்த வாய்ப்பு இலங்கை ஜனாதிபதிக்கும் கிட்டியுளது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசிய முன்னணி அரசு செய்து வருகின்றது.

அதைக் குழப்பத் திட்டமிட்டு வரும் ஜனாதிபதி குமாரதுங்க, அதற்கு ஒரு வாய்ப்பாக நாளைமறுதினம் உலகத் தலைவர்கள் முன்னிலையில் உரையாற்றுவதற்குத் தமக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவார் என நம்பப்படுகின்றது.

"தற்போதைய சமாதான முயற்சிகளை அவர் நேரடியாக விமர்சிக்க மாட்டார்.

"ஆனால், இந்தக் குழந்தைகள் மாநாட்டில் புலிகளின் 'பேபி பிரிகேட்' (குழந்தைகள் படையணி) பற்றி பிரஸ்தாபிப்பதன் மூலம் புலிகளுக்கும் அதன் வாயிலாக சமாதான நடவடிக்கைகளுக்கும் நெருக்குதலை ஏற்படுத்த அவர் முயல்வார் என எதிர்பார்க்கலாம்.

"புலிகளின் 'பேபி பிரிகேட்'டிலிருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதில் நெருக்கடி இருப்பது போலவும், புலிகள் நடத்தும் யுத்தத்தால் வடக்கு - கிழக்கில் கல்வி பாதிக்கப்பட்டு, அங்குள்ள சிறுவர்கள் அறிவு பெறமுடியாதநிலை ஏற்பட்டிருப்பது போலவும் ஜனாதிபதி அங்கு நீலிக் கண்ணீர் வடிப்பார் என எதிர்பார்க்கலாம்" - என்று கொழும்பு விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் நிற்கும் சமயம் இலங்கை ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதியைத் தனியாகச் சந்தித்துப் பேச வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், இலங்கைக்கு அதிகளவிலான ஆயுதங்களை விற்பனை செய்து வரும் குரோஷியா நாட்டின் ஜனாதிபதியை, இலங்கை ஜனாதிபதி குமாரதுங்க அமெரிக்காவில் வைத்து சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது.

சி.என்.என். தொலைக்காட்சிக்கு பேட்டி ஒன்றை அளிக்கவிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, அமெரிக்கத் தனியார் துறையின் பிரமுகர்களையும் அங்கு சந்தித்துப் பேசுவார் எனக் கூறப்பட்டது. (உ-12)

# லண்டனில் உதைபந்தாட்டம்

லண்டன்,மே6

லண்டனில் வாழும் ஈழத்தமிழர் அங்கம் வகிக்கும் ஐக்கிய தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று இன்று லண்டன் சவுத்ஹோலில் உள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 42தமிழ் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களின் அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (உ-3)

# வாகரைத் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகுகள் கண்மூடித்தனமாக நடத்திய றொக்கட் தாக்குதலில் மீன்பிடிப் படகுகள் பல மூழ்கடிக்கப்பட்டன.

முஹம்மது சமீம், ஏ.ஸி.நியூஸ் ஆகிய இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்; 36 மீனவர்கள் இந்த மோசமான தாக்குதலில் நூல் இழையில் தப்பி, கடலில் குதித்து நீந்திப் பிழைத்துள்ளனர்.

அண்மைய வாரங்களில் பகையுணர்வையும் ஆத்திரத்தையும் ஊட்டும் வகையில் ஸ்ரீலங்கா கடற்படை மேற்கொண்டு வரும் தொடர்நடவடிக்கைகளில் மிகப்பிந்திய - மோசமான - சம்பவம் இதுவாகும்.

சமாதான உடன்படிக்கையை முறியடிக்கும் நோக்கிலேயே கடற்படையினர் இப்படியான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என நாம் பலமாகச் சந்தேகிக்கின்றோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரதான நோக்கம் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் நல்லெண்ணப் புறநிலையையும் ஏற்படுத்தி, அரசியல் பேச்சுக்கு வழிசமைப்பதாகும். தரையிலோ, கடலிலோ, வானத்திலோ இராணுவ மோதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை சமாதான உடன்படிக்கை முற்றாகத் தடுக்கின்றது.

உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களையும், உடன்படிக்கை செய்யப்பட்டதன் நோக்கத்தையும் மீறி கடற்படை நடக்கிறது. அதன் மூலம் வேண்டுமென்றே மோதல் நிலைகளைத் தோற்றுவித்து, சமாதான முன்னெடுப்புக்களை முறியடிக்கிறது.

பகைமை எண்ணத்தைக் கைவிட்டு, சமாதான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி நடக்குமாறு கடற்படையை அரசு பணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

- இப்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

மீன்பிடிப் படகுகள் ஆயுதக்கடத்தலில் ஈடுபட்டிருந்தன என்று கடற்படை கூறியுள்ள குற்றச்சாட்டை புலிகள் திட்டவட்டமாக மறுத்து நிராகரித்திருக்கிறார்கள்.

அப்பாவி மீனவர்களுக்கு தாம் செய்த கொடுமையை மறைப்பதற்காக கடற்படையினர் புனைந்த படுபொய்க் கதை இது என்றும் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். (உ-3-12)

# தீவகத்துக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குட்டுக்கள் அம்பலமாகாது தடுப்பதற்காகவோ இட்டபெயரே தீவகம் இராணுவப் பிரதேசம் என்பது.

தீவக மக்களாகிய நாம் எமது பிரதேசம் இராணுவப் பிரதேசம் என்பதை மறுப்பதோடும், எமது உறவுகளை எமது தீவகப் பிரதேசத்திற்கு வரவேற்கவிடாது எமது உரிமையை தடுத்தமையை எதிர்க்கின்றோம்.

விடுதலைப் புலிகள் தீவகமக்களாகிய எம்மோடு இணையவும், அவர்கள் எமது பிரதேசத்தில் சுமுகமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிப்பதோடு, எமது பிரதேசத்தில் இருந்துவரும் கடற்படையினரின் அடாவடித்தனங்களை நீக்கவும் கோருகின்றோம்.

உலகில் எல்லாப் பிரதேசத்திலும் வீசும் சமாதானக்காற்றை நாங்கள் எங்கள் பிரதேசத்தில் நிம்மதியாக சுவாசிக்க வழிவகுத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

எமது நம்பிக்கை வீண்போகாது என்ற உறுதியான நம்பிக்கையுடன் துயரங்களைச் சுமக்கும் ஒவ்வொரு நிமிடங்களையும் சமாதானம் மலர வேண்டும் என்ற பேரவாவுடன் எண்ணிக்கொண்டு கழிக்கிறோம். எனவே, அரசுடன் கலந்துரையாடி, எமது நம்பிக்கை வீண்போகாது காக்குமாறு உங்களை பணிவன்புடன் வேண்டுகின்றோம் - என்று உள்ளது.

இந்த அறிக்கையில் தீவக மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள், கல்வித்துறை நெருக்கடிகள் மற்றும் விவசாயிகள், மீனவர்கள், பொது மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் என்பன குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. (உ)

# யாழ். 'அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மே6

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையில் இடம்பெற்றுவரும் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குக்கும் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்குக்கும் இடையில் நேற்று நடந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண லீக் வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றிவைத்ததை அடுத்து போட்டி ஆரம்பமானது. ஆட்டத்தில் யாழ்ப்பாணம் அணி 6-0 கோல் கணக்கில் கிளிநொச்சி அணியைத் தோற்கடித்தது.

இப்போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் ஆர்.இராமலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ்.ரூபசிங்கம், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ்.கனகராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ-ரி)

# மூவர் கைது

கொழும்பு,மே6

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூவர் நேற்றுமுன்தினம் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.


## கண்ணீர் அஞ்சலி



### தம்பிஜயா குமாரசாமி ஜே.பி.

*(விஜயாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் முன்னாள் உரிமையாளரும் மன்னார் வர்த்தக சங்கச் செயலாளரும் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைச் செயலாளரும் வேலணை கிழக்கு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் நெறியாளரும் வேலணை தேவி கோட்ட சனசமூக நிலையப் போஷகரும்)*

**இடப்பெயர்வு காலங்களில் எல்லோரையும் அரவணைத்து, ஆதரித்து, அன்பு காட்டிய கருணை நெஞ்சம் தன்னலமற்ற சேவையால் இளவயதில் சமாதான நீதிவானாகிய அமரர் த.குமாரசாமி அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து மிகவும் மனவேதனை அடைகின்றோம்.**

***அமரரின் ஆத்மா சாந்தி அடைய பெருங்குளத்து அம்மையை வேண்டிப் பணிகின்றோம்.***

*வேலணை.* (3503)

~ அருமை மைத்துனர் சிவம் சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் கதிர்காமு

சுருவிலைப் பிறப்பிடமாகவும் தம்பாட்டியை வசிப்பிடமாகவும்கொண்ட காலஞ்சென்ற வேலாயுதர் - நாகமூர்த்தி தம்பதிகளின் அன்பு மகன் கதிர்காமு நேற்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் முருகுப்பிள்ளை - செல்லம்மாவின் மருமகனும் இராசகோபால் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சரோசாதேவி மற்றும் செல்வராணி (பிரான்ஸ்), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), இந்திராணி (லண்டன்), புஸ்பராணி, சோதிலிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (பிரான்ஸ்), யோகராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சௌந்தலாதேவி (பிரான்ஸ்), ரதி (பிரான்ஸ்), சண்முகராசா (பிரான்ஸ்), சிவராசா (லண்டன்), நவரெத்தினம், நடேஸ்வரி (பிரான்ஸ்), மகாராசா (பிரான்ஸ்), சுசிலா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, ஆறுமுகம், கிஸ்ணபிள்ளை மற்றும் நாகம்மா, சிவலிங்கம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பூமணி, கதிரவேலு (சிவலை) மற்றும் உத்தமிப்பிள்ளை, கந்தசாமி, இராசம்மா, சிவஞானம், செல்வராசா, செல்வவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விறாட்டி முனை தம்பாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தங்கமணி (மனைவி)

*தம்பாட்டி, ஊர்காவற்றுறை.* (3508)

G.C.E. A/L 2002 மாணவர்களுக்கு! வெளியாகிவிட்டது

பரீட்சார்த்திகளுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்

3 வினாத்தாள்கள் விடைகளுடன்

2002 Apr. வரையான சகல பொது அறிவு விடயங்களும்.

ஆக்கியோர்:

திருத்திய ஐந்தாம் பதிப்பு - 2002 Apr. (3506)

பொது சாதாரண பரீட்சை - மே9

வழிகாட்டல் வகுப்பு

ஆரம்பம்: மே 6, 7, 8 - 3-6p.m.

ஆசிரியர்: T.திருமுருகன்

வழிகாட்டல் நூல் கிடைக்கும்.

திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ். றோட், இணுவில். (3491)

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி.

A/L 2003, 2004

பொருளியல்

யாழ். S.வரதராஜன்

ஆரம்பம்:- 07-05-2002 2.00 p.m.

Note:- அனுமதியை முன்கூட்டியே பெறவும். (3499)

பிறைற்றின் கல்வி நிலையம் சாவகச்சேரி.

தென்மராட்சியின் முன்னணி ஆசிரியர் குழுவுடன்

O/L Day Class

ஆரம்பம்: 08-05-2002 புதன் 7.30 a.m. (3498)

உ

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 07.05.2002 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி. |
| இரதோற்சவம் | - 16.05.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணி |
| தீர்த்த உற்சவம் | - 17.05.2002 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி. |
| பூங்காவனம் | - 18.05.2002 சனிக்கிழமை மாலை 5.00 மணி. |

(C/22036) ...ாயக அடியார்கள்.


இப்பத்திரிகை நியூ உ... (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.